Yahoo SMS புரட்சி | வெள்ளி விழாக் காணும் இறுவட்டு

தமிழ்

# PC TIMES


ஒக்டோபர் 2007 ● OCTOBER - 2007
மலர் - 02 ● இதழ் - 08

கணினிக் கல்லூரி



இணைக்கப்பட்டுள்ளது

Photoshop
Ms Word
Ms Excel
Help Desk
JAVA
GIT
ICT



# ஊடகவியலில் நீங்கள்

பீசி டைம்ஸ் ISSUE.20 Rs. 30/-


இலங்கையின் ஒரேயொரு மாதாந்த தகவல் தொழில்நுட்ப சஞ்சிகை

ISSN 1800 - 3184 ● www.pctimes.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புது வரவுகள்

## Portable Hard Drive & DVD Burner



Sam Hacht நிறுவனத்தினால் வடிவமைப்பு செய்யப்பட்டுள்ள கையடக்க வன்தட்டுக்கள் விற்பனைக்காக சந்தைக்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இந்த கையடக்க வன்தட்டுக்களின் வடிவமைப்பு கண்ணைக் கவரும் வகையில் அமைந்துள்ளது. இதன் வெளிப்புறத்தோற்றமானது, மினுமினுப்புத் தன்மை உடையதாக காணப்படுகிறது. இவை 30GB முதல் 250 GB கொள்ளளவு வீச்சில் சந்தைக்கு விற்பனைக்கு வந்துள்ளன. இதனோடு சேர்ந்தாற் போலவே, DVD burner உம் LaCie நிறுவத்தால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது. 8x என்பதே இதன் எழுதும் வேகமாகும். கையடக்க வன்தட்டு 90 அமெரிக்க டொலர்களுக்கும், DVD burner ஆனது 100 அமெரிக்க டொலர்களுக்கும் அறிமுக விலையில் விற்கப்படுகின்றன.

## Computer Music Monitor




Bose and do நிறுவனமானது, கணினிகளுக்கான ஒலிபெருக்கிகளை அறிமுகம் செய்து வைத்துள்ளது. இந்த ஒலிபெருக்கிகள் ஒரு மனிதனின் கை புஷ்டியின் அளவை உடையதாக வடிவமைக்கப்பட்டுள்ளன. Subwoofer கள் பொருத்தாத நிலையிலும், கணினியில் தொழில்படுத்தப்படும் ஒலிக்கோப்புகளின் ஒலிகளின் துல்லியத் தன்மையைப் பெற்றுக்கொள்ள முடியும். இது ஒக்டோபர் 4 ஆம் திகதியே சந்தைக்கு விற்பனைக்காக விடப்படவுள்ளது. இதன் அறிமுக விலையாக 399 அமெரிக்க டொலர்கள் அமையலாமென எதிர்வு கூறப்படுகின்றது.

## NOKIA E51




அண்மையில் Nokia நிறுவனமானது தமது E தொடர் Business Smartphone வரிசையில் E51 எனும் மாதிரியை அறிமுகம் செய்யவுள்ளதாக அறிவித்தது. இது அலுவலக மற்றும் தனிப்பட்ட பாவனை ஆகிய இரு நிலைகளுக்கும் பொருந்தக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பிடிக்கப்படும் வீடியோக்களின் தெளிவு உச்ச அளவில் காணப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இந்த கையடக்கத் தொலைபேசியில் FM ரேடியோ, Mp3 Player, Wi-Fi, Mini SD Storage எனும் பண்புகள் காணப்படுவதோடு காரியாலய தொலைத் தொடர்புகளை இலகுவாக்கும் Activesync, Exchange, easy Volp மற்றும் Nokia Office Tools 2.0 போன்ற மென்கருவிகளையும் தன்னகம் கொண்டுள்ளது. இது இவ்வருட இறுதிக் காலாண்டில் 485 அமெரிக்க டொலர்களுக்கு உலகளவில் விற்பனைக்காக விடப்படவுள்ளது.


தொகுப்பு ZEEZAT

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்
PC TIMES
தகவல் தொழில்நுட்ப சஞ்சிகை
● OCTOBER 2007 ● VOLUME 02 ● ISSUE 08

உள்ளடக்கம்

02 புது வரவுகள்
04 ஆசிரியர் தலையங்கம்
முகப்பின் முகவரி
06 பிரஜைகளால் வளம் பெறும் ஊடகவியல்
09 நாங்களும் செய்வோமில்ல
10 சீனாவில் இணையத்திற்கும் பொலிஸ்
26 OEM Logo வை மாற்றம் செய்தல்
27 மாயமா? மந்திரமா?
28 வெள்ளி விழாக் காணும் CD
30 Hack Insight: Windows வித்தைகள்
31 விழிக்கோணங்கள்
32 Screen ஐ இலகுவாக Capture செய்தல்
33 GSM - வயது இருபது
34 வாசகர் திருமுகம்
35 இணைய வெளி

























## கணினிக் கல்லூரி

கணினிப் பாட இணைப்பிதழ்

- Ms Word
- Photoshop
- Ms Excel
- GIT
- Help Desk
- Java
- ICT for Grade 10 & 11

11-26

தமிழ்
PC TIMES

No. 08, Hunupitiya Cross Road,
Colombo - 02, Sri Lanka
Tel : +94 11 2 479656
email : pctimes@wijeya.lk
web : www.pctimes.lk

wijeya newspapers
helping ... opinions

Printers & Publishers
WIJEYA NEWSPAPERS LTD
No. 08, Hunupitiya Cross Road,
Colombo - 02,
Sri Lanka
Tel : +94 11 2314714

**Editor**
K.Rushangan
editorpctimes@wijeya.lk

**Sub Editor**
Tharique Azeez

**Layout Designer**
R.Vinothini

**Editorial Coordinator**
R.R. Jeyakeshan

**Assistant Manager**
**Supplements & IT Publishing**
Sunanda Karunaratna

**Production Manager**
Ashley Cooray

**Circulation Manager**
Rohan Fonseka

**Information Systems Manager**
Naveen Gunaratne

**Desktop Publishing Manager**
Chandana Dasanayke

**Advertising Sales Manager**
Saaranga Wijeratne

**Assistant Manager**
**Subscription**
Ranjith Rupasinghe

**Brand Manager**
Sujith Pathirannehe

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தமிழ் PCTIMES இன் சந்தாதாரராகுங்கள்!!

### உள்நாட்டு சந்தாக் கட்டணங்கள்

| காலம் | கொழும்பு நகர எல்லைக்குள் | உள்ளூர் தபால் |
|---|---|---|
| ஒரு வருடம் | 360.00 | 540.00 |
| ஆறு மாதம் | 180.00 | 270.00 |

### வெளிநாட்டு சந்தாக் கட்டணங்கள்

வெளிநாட்டு சந்தாக் கட்டண விபரத்தை அறிந்து தொடரறா நிலையிலே சந்தாதாரராக எமது இணையத்தளத்திற்கு விஜயம் செய்யுங்கள்.

www.pctimes.lk

காசுக்கட்டளையை அனுப்புவோர் பணம் செலுத்தும் தபால் அலுவல கமாக Slave Island எனக் குறிப்பிட்டு அனுப்பவும். காசோலைகளை அனுப்புவோர் WIJEYA NEWSPAPERS LTD. என்ற பெயருக்கு காசோலைகளை எழுதுதல் வேண்டும். காசுக் கட்டளைகள் அல்லது காசோலைகளை நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி

Asst. Manager / Subscription
Wijeya Newspapers Ltd.
No. 08, Hunupitiya Cross Road,
Colombo - 02,
Sri Lanka.
Tel : 2307789, 2 314714 Ext. 626,
Fax : 2459725, email : subs@wijeya.lk

### விளம்பரக் கட்டண விபரம்

| | முழுப்பக்கம் | ½ பக்கம் | ¼ பக்கம் | ⅛ பக்கம் |
|---|---|---|---|---|
| பின்னட்டை | 25,000.00 | - | - | - |
| பின் உள்ளட்டை (வர்ணம்) | 22,500.00 | - | - | - |
| முன் உள்ளட்டை | 20,000.00 | - | - | - |
| உள்பக்கம் (க/வெ) | 10,000.00 | 6,000.00 | 3,000.00 | 1,500.00 |
| உள்பக்கம் (க+1) | 12,500.00 | 6,500.00 | 3,500.00 | 1,750.00 |
| உள்பக்கம் (க+2) | 15,000.00 | 8,000.00 | 4,000.00 | 2,000.00 |
| உள்பக்கம் (வர்ணம்) | 17,500.00 | 9,000.00 | 4,500.00 | 2,500.00 |

விளம்பரத் தொடர்புகளுக்கு

Advertising Manager,
Wijeya Newspapers Ltd.,
48, Parkway Building, Park Road,
Colombo - 02.

# வாங்கியா? வழங்கியா?

தகவல் தொடர்பாடலின் முக்கியத்துவம் பற்றி நாம் இங்கு பல தடவைகள் பேசியிருக்கிறோம். தகவல் தொழில்நுட்பத்தின் வருகையும், தாக்கமும் தகவல் தொடர்பாடலை எவ்வளவுதூரம் வலிமையானதாகவும், இலகுவானதாகவும் ஆக்கியிருக்கிறது என்பதுபற்றியும் பார்த்திருக்கிறோம்.

இந்தத் தகவல் தொடர்பாடலில் ஊடகங்களின் பங்கு மிகவும் முக்கியமானது. பத்திரிகைகள், சஞ்சிகைகள் முதல் வானொலி, தொலைக்காட்சி, இணையம் வரையில் தகவல் தொடர்பாடலில் ஊடகங்கள் பெரும் செல்வாக்குச் செலுத்தி வருகின்றன. நீங்கள் இப்போது படித்துக்கொண்டிருக்கும் இந்த PC Times கூட சஞ்சிகை எனும் வடிவிலான ஒரு அச்சு ஊடகம்தானே.

பெரும் மக்கள் திரளுக்கு தகவல்களை வழங்குவதுதான் இந்த ஊடகங்களின் பங்கு-பணி. வாசகர்கள், நேயர்கள் அல்லது பார்வையாளர்களுக்காக ஊடகங்கள் தகவல் களைத் திரட்டி, வாசிப்பதற்கும், கேட்பதற்கும், பார்ப்பதற்கு மென வழங்குகின்றன. இங்கே தகவல்களைத் திரட்டுவதும், வழங்குவதும் ஊடகங்கள்தான். மறு அந்தத்தில் அவற்றை "வாங்கு"வோராக வாசகர்கள் அல்லது பார்வையாளர்கள் இருக்கின்றனர்.

இங்கு மக்கள் திரளுக்கு என்ன தகவலைச் சொல்வது (எதை விடுவது) என்பதைத் தீர்மானிப்பது ஊடகங்கள்தான். தமக்கு வழங்கப்படும் தகவல்களைத் தீர்மானிக்கும் சக்தி மக்கள் திரளிடம் நேற்று வரையில் இருந்ததில்லை. இது ஒரு வகை மூளைச்சலவைக்கும் வழிவகுத்துவிடும் அபாயம் உண்டு.

ஆனால், ஒரு பெரும் மக்கள் திரளுக்கான தகவல் தொடர்பாடலை மிகவும் இலகுவான ஒன்றாக ஆக்கிய தகவல் தொழில்நுட்பமே, இந்தப் பிரச்சினைக்கும் இப்போது ஒரு தீர்வைச் சாத்தியமாக்கியுள்ளது. Citizen Journalism எனப்படும் பிரஜைகள் ஊடகவியலின் தோற்றத்துக்கு வழிகோலியதன்மூலம் அது சாத்தியப்பட்டுள்ளது. "தமக் கான, தம்மைப்பற்றிய தகவல்களை தாமே வழங்குதல்" என்றதொரு நிலையை மக்கள் திரளுக்கு இது ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது.

மக்கள் திரள் வெறுமனே தகவல் "வாங்கி"களாக இராமல், தகவல் "வழங்கி"களாகவும் தொழிற்படும் வாய்ப்பை இந்தப் புதிய ஊடகவியல் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. கட்டுப்பாடுகளற்ற, வெளிப்படையான, சுதந்திரத் தகவல் பரிமாற்றத்துக்கு இதன்மூலம் வழிகோலப்பட்டிருக்கிறது.

ஆனால், இந்தப் புதிய துறையை மக்கள் எவ்வளவுதூரம் தமது கைகளில் எடுத்துக்கொள்ளப்போகிறார்கள் என்பதி லேயே இதன் வெற்றி தங்கியுள்ளது.

நீங்கள்கூட PC Times இன் பிரஜை ஊடகவியலாளர் ஆகலாமே?

*- ஆசிரியர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IT NEWS HIGHLIGHTS

தொகுப்பு : உதய தாரகை

## வைரஸ்: 25 வயதாகிறது!

உலகிலேயே முதலாவதாக வைரஸ் தொற்றிக் கொண்ட கணினி Apple II கணினி வகையைச் சேர்ந்ததாகும். Rich Skrenta என்ற ஒன்பதாம் தரத்தில் படிக்கும் மாணவன் தனது சகபாடிக்கு பகிடியாக எழுதிய செய்நிரல்தான் பின்னர் கணினியை கதிகலங்க வைத்ததெனலாம். "Elk Cloner" என்பதுதான் அதன் பெயர். Windows பணிசெயல்முறையை தாக்கிய முதலாவது வைரஸ் "Brain" என்பதை நீங்கள் அறிவீர்கள். இதனை பாகிஸ்தானைச் சேர்ந்த Basit மற்றும் Amjad ஆகிய இருவரும் சேர்ந்து எழுதியிருந்தார்கள். இவர்கள் சகோதரர்கள் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

1982 ஆம் ஆண்டு Apple கணினிகளிடையே பரவிய Elk Cloner எனும் வைரஸானது, கனிணி விளையாட்டைக் கொண்ட நெகிழ்வட்டில் (Floppy Disk) சேமிக்கப்பட்டிருந்தது. இந்த நெகிழ்வட்டை 49 தடவைகள் மாத்திரமே பயன்படுத்த முடியும். 50 ஆவது தடவை பயன்படுத்துகையில் கணினி விளையாட்டை ஆரம்பிப்பதற்கு பதிலாக அது ஒரு சிறிய கவிதை கொண்ட வெற்று நீலத்திரையைக் கணினியில் காண்பிக்கும்.

அந்த வைரஸ் காட்சிப்படுத்திய கவிதை இதுதான்:


*"It will get on all your disks. It will infiltrate your chips. Yes it's Cloner! It will stick to you like glue. It will modify RAM too. Send in the Cloner!".*

விளையாட்டிற்காக உருவாக்கப்பட்ட ஒரு செய்நிரல், பிற்காலத்தில் கணினிகளையே கதிகலங்க வைக்கும் நிலைக்கு கொண்டு வருமா என அந்த ஒன்பதாம் தரத்தில் கற்ற மாணவன் சிந்தித்திருப்பானா?

என்னதான் எண்ணியபோதிலும், வைரஸ் உருவாகிப் பரவி, 25 ஆண்டுகளும் ஆகிவிட்டது. எரிச்சலூட்டி ஒன்றினது வெள்ளி விழா என்றே இதனை அடையாளப்படுத்த வேண்டியுள்ளது. நாளுக்கு நாள் கணினியில் வித விதமான வைரஸ்கள் தொற்றிக் கொள்வதும் அவற்றை அழித்தொழிக்க புதிய வைரஸ் எதிர்ப்பு மென்பொருள்களை மென்பொருள் தயாரிப்பு நிறுவனங்கள் தயாரித்து வெளியிடுவதும் வாடிக்கையாகிவிட்டது. துருவிகளும் வினோதாம்சத்தை கருத்தில் கொண்டு வைரஸ்களை உருவாக்கி தமது நண்பர்களை அதிர்ச்சியில் ஆழ்த்த முனைவதும், பின்னர் அவ்வைரஸ்கள் இணையம், சேமிப்பு சாதனங்கள் வழியாக பரவி உலகளவில் உள்ள கணினிகளை கதிகலங்கச் செய்வதுவும் மிகத் தீவிரமாகவே இடம்பெற்று வருகின்றது.


மலிவாக இணையத்தளம் அமைக்க வேண்டுமா?
...com.org.net.info.biz.lk.uk.in.us....
*100MB
முதல் விரும்பிய மட்டும்!
எதுவானாலும் பதிவுசெய்யலாம்!
ஒரேநாளில் அனைத்தும்!
*உலகளாவியரீதியில் 300 க்கும் அதிக தளங்களை நிறுவிய சாதனை
*எமது சேவர்கள் USA,UK நாடுகளில் இருக்கின்றன
*Windows/Linux Server
*மாணவர்களுக்கு விசேட சலுகை
*MYSQL/MSSQL Database
*Hotline:0777 563213
ரூ1000 தொடக்கம்!*Google நிறுவனத்தின் இலவச சேவைகள் இன்னும் பலப்பல.....
Speed IT net Tel/Fax:021-4591871 Web: http://www.speeditnet.com


## இவரைத் தெரிகிறதா?



Microsoft நிறுவனத்தால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட Professional Computer User என்ற தகுதியை தனது எட்டு வயதிலேயே பெற்றுக்கொண்ட இந்தியாவின் மாணவன் Mridul Seth ஐ படத்தில் காண்கிறீர்கள். இப்போது பதினொரு வயதாகும் இச் சிறுவன் இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் உயர்நிலை 3D Animation படிப்பை மேற்கொண்டு வருகிறான்.

*புதிய பல தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பிந்திய தகவல்களை உடனுக்குடன் அறிய* **www.pctimes.lk** *எனும் எமது இணையத்தளத்திற்கு விஜயம் செய்யுங்கள்.*

AFP/AFP DESHAKALYAN CHOWDRY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகவியலைச் செம்மைப்படுத்தும் பணியில் பிரஜைகள்




*தாரிக் அஸீஸ்*

நவீன தொழில்நுட்ப மாற்றங்கள் ஒவ்வொருவரிடமும் கையடக்கச் சாதனங்கள் இருக்கவேண்டியதன் வாய்ப்பை அதிகரித்துவிட்டதெனலாம். இன்று கையடக்கத் தொலைபேசிகள் வெறுமனே தொடர்பாடலுக்காக மட்டுமன்றி, இன்னும் பல விடயங்களைச் செய்யக்கூடியதாக வடிவமைக்கப்படுகின்றன. இந்தப் புதிய தொழில்நுட்ப அடைவுகள் உலகளவில் பல்வேறு துறைகளிலும் மாறுதல்களை உண்டு பண்ணிக் கொண்டிருக்கின்றன.

ஆரம்ப காலங்களில் செய்திகளைச் சுடச் சுட அறியத்தருவதில் வானொலி தொலைக்காட்சி போன்றன முக்கியத்துவ மிக்க செய்தியூடகங்களாகத் திகழ்ந்தன. இன்றளவில் இணையம் இந்த இடத்தைப் பிடித்துக்கொண்டு வருகிறது என்றே சொல்லவேண்டியுள்ளது. இணையமானது, உலக நடப்பு விவகாரங்களை உடனுக்குடன் சொல்லக்கூடிய மூலமாக மாறியதற்கு இணையப் பயனர்களின் பங்கும் அளப்பரியது. கையடக்கச் சாதனங்களைக் கொண்டுள்ள மக்கள், குறித்த நிகழ்வொன்று நடைபெறும் இடத்திற்கு உரிய நேரத்தில் சென்று அது தொடர்பான தமது கருத்துக்களை வெளியுலகமே கண்டறியச் செய்வதற்காக இணையத்தினூடாக உடனுக்குடன் வெளியிடுகிறார்கள். இதனால் பாரம்பரிய ஊடகக் கலாசாரமே மாற்றமடைந்துள்ளதாக விமர்சகர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

தொலைக்காட்சி, வானொலி மற்றும் பத்திரிகை போன்ற பாரம்பரிய ஊடக மூலங்களின் செய்தி வழங்கியாக இணையம் இன்று உருவாகியிருப்பது, மக்களால் வழங்கப்படும் செய்திகளின் மீதான கவனம் அதிகரித்துள்ளதையே சுட்டிக்காட்டுகிறது.

இன்றைய தொழில்நுட்பங்களின் சாத்தியங்களால் பாரம்பரிய ஊடகங்களின் நிலைகளில் வாசகர்கள், நேயர்கள் மற்றும் பார்வையாளர்கள் என அனைத்துத் தரப்பினரும் ஒரு சேரக் கலந்துகொள்ளக்கூடிய வாய்ப்பு உண்டாக்கப்பட்டுள்ளது. இதனால், மக்களால் ஊடகவியல் போஷிக்கப்படுகிறது. இதன்மூலம் Citizen Journalism என்கின்ற பிரஜை ஊடகவியல் மிகவும் வலுப்பெற்று விளங்குகின்றது. இந்தப் புதிய எண்ணக்கரு பற்றிய விடயங்களை நாம் அலசி ஆராய்வோம்.

## Citizen Journalism என்றால் என்ன?

பிரஜை ஊடகவியல் கொண்டிருக்க வேண்டிய விடயங்கள் பற்றிய தெளிவான வரைவிலக்கணங்கள் வரையறுக்கப் படவில்லை. ஆனால், ஒரு சம்பவம் அல்லது விடயம் சார்பாக குறித்த நேரத்தில் தகவல்களை பொதுமக்கள் மூலம் பெற்று அதனை விபரமாகச் சொல்லும் ஒரு முயற்சியாக இதனைப் பொதுவாகக் கருதலாம்.

இன்று பெரிய ஊடக அமைப்புகள் கூட இந்தப் புதிய எண்ணக்கரு பற்றி

> “ தொலைக்காட்சி, வானொலி மற்றும் பத்திரிகை போன்ற பாரம்பரிய ஊடக மூலங்களின் செய்தி வழங்கியாக இணையம் இன்று உருவாகியிருப்பது, மக்களால் வழங்கப்படும் செய்திகளின் மீதான கவனம் அதிகரித்துள்ளதையே சுட்டிக்காட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிக கவனம் எடுத்துக் கொள்கின்றன. ஒருவழிப் பாதையாக இருந்த செய்தி வழங்கல், இன்றளவில் இரு வழித் தொடர்பாடல் உலகமாக மாறியிருக்கக் காணலாம். இப்போது பெரிய ஊடக நிறுவனங்களின் இணையத்தளங்களிலும் பயனர்களினால் செய்தி உள்ளடக்கங்களை வழங்குவதற்கான வசதிகளை ஏற்படுத்திக கொடுத்திருக்கிறார்கள். இதன் காரண மாகவே ஒரு விடயம் தொடர்பாக நிறைவான செய்திகளை வித்தியாசமான கோணங்களினூடாக அணுகி, செய்தி நிறுவனங்களால் வழங்க முடிகிறது.

### எந்த விடயத்தைப் பற்றிக் கதைக்க வேண்டும்?

உள்ளூர் விடயங்களைப் பற்றிக் கதைப்பது பிரஜை ஊடகவியலில் மிகவும் விரும்பத்தக்க விடயமாகும். நீங்கள் கடந்த 30 ஆண்டுகளாக ஒரு சிறிய கிராமத்தில் வசித்து வருகிறீர்கள் என வைத்துக் கொள்வோம். அங்கு வாழ்ந்ததால் அந்தக் கிராமம் பற்றிய அத்தனை விடயங்களும் உங்களுக்குத் தெரிந்திருக்கும். நிறையத் தொடர்புகள் உங்களுக்கு ஏற்பட்டிருக்கும். ஒரு விடயம் சார்பாக மிகப் பொருத்தமான தகவல்களை எங்கு பெற்றுக்கொள்ள முடியுமென்ற அறிவு உங்களிடம் தன்னிச்சையாகவே வளர்ந்திருக்கும்.

இவ்வாறு நீங்கள் உங்கள் நேரடி அனுபவத்தின் மூலம் உண்மை நபர்களிடம் நேரடியாகப் பெறும் தகவல்கள், நிகழ்வு கள் தொடர்பான விடயங்கள் என்பன செய்தியாக்கப்படுகையில் அதற்கு அதிக வரவேற்பிருக்கும். உள்ளூர் பத்திரிகைகள் வாசகர்களின் பங்களிப்புகளை பெரிதும் விரும்புகின்றன. லண்டனின் வடக்குப் பகுதியிலிருந்து வெளியாகும் Ham and High என்ற பத்திரிகையானது, வாசகர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட மறுமொழிகள், கருத்துக் கள், விமர்சனங்கள், கார்டூன்கள், மற்றும் குறுக்கெழுத்துப் புதிர்கள் என பல விடயங்களும் அடங்கிய 24 பக்கமுடைய இணைப்பிதழை அண்மையில் வெளி யிட்டிருந்தமையானது, பிரஜைகளின் பங்களிப்பு தொடர்பில் பத்திரிகைகள் கொண்டுள்ள ஆர்வத்தையே குறித்து நிற்கிறது.

அதுமட்டுமல்லாது, இப்போது நீங்கள் சொல்ல விரும்பும் செய்திகளை வெளியிட பல இணையத்தளங்களும் காணப்படுகின்றன. nowpublic.com என்பது இது தொடர்பில் மிகப் பிரசித்தமான இணைய முயற்சியாகும். இந்த இணையத் தளத்திலிருந்தே பல முன்னணிச் செய்தி நிறுவனங்களும் செய்திகளைத் திரட்ட ஆரம்பித்துள்ளன என்றால் நம்ப முடிகிறதா? இதுதான் மக்கள் பலம் என்பதோ!



### பணம் பண்ணலாம் வாங்க!

உங்கள் கையடக்கத் தொலைபேசி யில் நீங்கள் பிடிக்கும் பெறுமதியான நிகழ்வுகளைக்கொண்ட நிழற்படங்களை அதிகளவான பணம் செலுத்தி உங்களிடம் இருந்து கொள்வனவு செய்ய நிறைய இணையச் சேவை நிறுவனங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் கீழே காட்டப்படுபவை சில முக்கியமான இணையச் சேவைகளாகும்.

நீங்களும் உங்கள் கையடக்கத் தொலைபேசி கமராவினால் எடுக்கும் அரிதானபெறுமதியுள்ளநிழற்படங்களை இச் சேவைகளுக்கு வழங்கி பணம் பண்ணலாம். நீங்க ரெடியா?

- www.scoopt.com
- www.celljournalist.com
- www.scooplive.com
- www.spymedia.com
- www.citizenimage.com
- www.fotolia.com
- www.fotopages.com
- www.plinkme.com

### என்னவெல்லாம் தேவை?

பிரஜை ஊடகவியலின் தோற்றுவாயாக Smart Phone வகையைச் சேர்ந்த கையடக் கத் தொலைபேசிகளே காணப்படுகின் றன. சாதாரணமாக 3.2 மெகா பிக்சல் அல்லது அதை விடக் கூடிய பிரிதிறன் வலுவுடைய Sony Ericsson Cyber shot அல்லது Nokia N75 போன்ற கையடக்கத் தொலைபேசிகள் ஒளிப்படங்களைப் பெற்றுக்கொள்ளப் பொருத்தமானதென Scoopt ஒளிப்படச் சேவையின் ஸ்தாபகர் Kyle MaRae கூறுகிறார். Scoopt.com ஆனது இவ்வாறு நீங்கள் கையடக்கத் தொலைபேசி மூலம் பிடிக்கும் ஒளிப்படங் களை ஊடக நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதற்கான வாய்ப்பை உண்டு பண்ணித் தரும் பிரபல்யமான இணைய முயற்சியாகும்.

இந்தச் சேவைக்காக பயனர்களால் சமர்ப்பிக்கப்படும் 90 சதவீதமான ஒளிப் படங்கள் பிரத்தியேக டிஜிடல் கமராக்கள் மூலமாக பெறப்பட்டதாகவே காணப் படுகின்றன என Kyle மேலும் தெரிவிக் கின்றார்.

ஒளிப்படங்களைப் பிடிக்கும் போது, உச்ச பிரிதிறன் (Highest Resolution) அளவிலேயே பிடிக்க வழிசெய்ய வேண் டும். இதற்காக மேலதிகமாக Memory card களை உடன் வைத்திருத்தல் உபயோக மானதாக இருக்கும். ஒலிகளைப் பதிவு செய்யவேண்டிய அவசியமிருந்தால் Voice recording வசதியுள்ள mp3 player ஐ வைத்திருத்தல் போதுமானதாகும்.

### பணம் சம்பாதிக்க முடியுமா?

ஏன் இல்லை? ஆனால், இது சில விடயங்களில் தங்கியுள்ளது. ஒரு நிகழ்வைப் பற்றிய விடயங்களை ஊடக அமைப்புகள் திரட்டிக்கொண்டிருக்கும். நீங்களும் அந்நிகழ்வைப் பற்றிய விடயங்களை ஒளிப்படமாக எடுக்கிறீர்கள் என வைத்துக்கொள்வோம். குறித்த சம்பவத்தில் யாரும் எடுக்கத் தவறிய ஒளிப்படமொன்றை நீங்கள் பிடித்திருந் தால், அதனைப் பெற்றுக்கொள்ள ஊடக அமைப்புகள் உங்களை அணுகும். நீங்கள் தீர்மானிப்பதுதான் அதன் விலை. தொகை தொகையாகச் சம்பாதிக்கலாம்.

அண்மையில் லண்டனில் இடம்பெற்ற 21/7 குண்டுவெடிப்பில் சம்மந்தப்பட்டவர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை கைது செய்கையில் பிடிக்கப்பட்ட பிரத்தியேகமான பதிவு சுமார் 60,000 ஸ்டேலிங் பவுனுக்கு கொள்வனவு செய்யப்பட்டதை நீங்கள் அறிவீர்களா?

ஏன் லண்டனுக்குப் போவான். 2004 டிசம்பரில் இலங்கையைச் சுனாமி தாக்கியபோது இடம்பெற்ற பல விடயங்கள் இவ்வாறு அந்தந்தப் பிரதேசங்களில் வாழ்ந்தோர் பிடித்த படங்கள் மூலமே தத்ரூபமாக வெளியுலகம் அறியச் செய்யப்பட்டது. இவ்வாறான காட்சிகள் பெருந்தொகைப் பணம் கொடுத்து வெளிநாட்டு செய்தி நிறுவனங்களால் வாங்கப்பட்டன.

காலி கடற்கரையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பெண் ஒருவரின் தங்கச் சங்கிலி அபகரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இவ்வாறான வீடியோ ஒளிப்பதிவு முயற்சியொன்றே தக்க ஆதாரமாக இருந்து குற்றவாளிக்கு தண்டனை வாங்கிக் கொடுத்தது.

காலி கடற்கரையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பெண் ஒருவரின் தங்கச் சங்கிலி அபகரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இவ்வாறான வீடியோ ஒளிப்பதிவு முயற்சியொன்றே தக்க ஆதாரமாக இருந்து குற்றவாளிக்கு தண்டனை வாங்கிக் கொடுத்தது.



### விதிகள், சட்டங்கள் உள்ளனவா?


Citizen Journalism சில வேளைகளில் விழுமியங்கள் தொடர்பான பிரச்சினைகளைக் கொண்டிருக்கக்கூடும். எதிர்காலத்தில் ஒருவரின் விடயத்தில் மற்றவர் மூக்கை நுழைக்கும் ஆர்வங்கள் அதிகரிக்கக் கூடும் என்ற பீதி நிறையவே உண்டு.

"வெள்ளத்திற்கான அணையைத் திறப்பது போன்று நாமும் எமது சேவையை ஆரம்பித்தோம். ஆரம்பத்தில் தனி மனித சுதந்திரம் தொடர்பில் ஏதும் தகிடுதித்தங்கள் ஏற்படுமோ என்ற பயம் எமக்கிருந்தது. இருந்தபோதிலும் இரண்டு வருடங்களாகிவிட்டன. எதுவுமே விபரீதமாக நடக்கவில்லை" என்று பெருமையாக Mac Rae தெரிவிக்கின்றார்.

மற்றவரைப் பாதிக்காத வகையில் எமது செய்திகளை சான்றுகளுடன் வெளியிடும்போது, உண்மைகள் என்றுமே உறங்குவதில்லை என்ற மொழிக்கேற்ப அவை பிரபல்யமடையுமென எதிர்பார்க்கலாம் என விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

பிரஜைகள் மூலம் போஷிக்கப்படும் நிகழ்வு தொடர்பான செய்திகள் யாவும் குறித்த விடயத்தைப் பற்றிய அத்தனை விபரங்களையும் வெவ்வேறு கோணங்களில் உலகறியச் செய்கின்றன. ஒரு சூழலில் வாழும் தனிநபர்களாலேயே அந்தச் சூழல் தொடர்பான துல்லியமான தகவல்களைப் பெற முடியும் என்ற கருத்தை பிரஜை ஊடகவியல் என்ற எண்ணக்கரு வலியுறுத்தி நிற்கிறது.

நீங்களும் உங்கள் சூழலில் நடைபெறும் விடயங்களை உண்மையாகவே உலகறியச் செய்யலாம். பிரஜைகளின் பலத்தில் உங்கள் வலிமையும் ஒன்று சேரட்டுமே!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நாங்களும் செய்வோமில்ல!

**Yahoo mail புதிய புரட்சிகரமான சேவையை தமது பயனர்களுக்கு முந்திக்கொண்டு வழங்கியுள்ளது.**

*உதய தாரகை*

Yahoo mail, gmail, hotmail ஆகிய எல்லாமேஇலவசமாகக்கிடைக்கும் மின்னஞ்சல் சேவைகளின் பெயர்கள் தாம். இவை ஒவ்வொன்றுமே ஏட்டுக்குப் போட்டியாக பல முன்னேற்றகரமான சேவைகளை மின்னஞ்சல் பயனர்களுக்கு வழங்குவதில் ஆர்வங்காட்டி வருகின் றன.

எடுத்த எடுப்பிலேயே அதிகளவு இலவச கொள்ளளவை வழங்கிய Gmail இல் கூட இலவசமாக வழங்கப்படும் கொள் ளளவு மட்டுப்படுத்தப்பட்டது தான். அது 2.8GBயாகவே இருக்கிறது (ஒவ்வொரு செக்கனும் கூடிக் கொண்டேயிருக்கிறது). hotmail இல் 2.5 GB வழங்கப்படுகிறது.

ஆனாலும், Yahoo mail இல் மட்டுப்படுத்தப்பட்ட கொள்ளளவு என்ற கதைக்கே இடமில்லை. சில மாதங்களுக்கு முன்பு Yahoo mail இன் இலவசக் கொள்ளளவு வரையறுக்கப்படாத (Unlimited) அளவுக்கு மாற்றப்பட்டதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இனி, மின்னஞ்சல் சேவை நிறுவனங்கள் இலவச மாக வழங்கியுள்ள கொள்ளளவு குறைந்து விடுமே என்ற கவலையோ எண்ணமோ Yahoo mail பாவனையாளர்களுக்கு இருக்காது!

அதுமட்டுமா! இணையத்திலிருந்தபடி எந்த மென்பொருளையும் கணினியில் நிறுவாமலேயே இணைய அரட்டையில் ஈடுபடும் வசதியை Yahoo நிறுவனம் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தனது மின்னஞ்சல் பயனர்களுக்கு வழங்கிய விடயம் பற்றியும் எமது ஜூன் மாத இதழில் குறிப்பிட்டிருந்தோம். இந்த வகையான அரட்டைக்காக பிரத்தியேகமான இணை யத் தளத்தையே Yahoo நிறுவனம் உருவாக்கியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இவை போதாதென்று, கடந்த மாதம் தனது மின்னஞ்சல் பயனர்களுக்கு மேலும் பல சேவைகளை இலவசமாகவே வழங்கியுள்ளது Yahoo நிறுவனம்.

இதன்படி, Gmail இடைமுகத்திலி ருந்தபடியே இணைய அரட்டையில் ஈடுபடும் நிலைமையைப் போன்று, Yahoo நிறுவனமும் Yahoo mail பயனர்களுக்கு வழங்கியுள்ளது. இதனால், மின்னஞ்சல் பார்க்கும்போதே எமக்கு தேவையானவர்களுடன் அரட்டையிலும் ஈடுபடும் வசதி Gmail போலவே Yahoo விற்கும் வந்தாச்சு என்பது Yahoo mail பிரியர்களுக்கு இனிப்பான செய்தியே!

நாங்களும் எல்லாவற்றையும் எமது பயனர்களுக்கும் வழங்குவோம் என்ற தொனியில் Gmail இற்கு போட்டியாகவே இந்தச் சேவை வழங்கலில் Yahoo வும் இறங்கிவிட்டது.

ஆனாலும், Yahoo mail இன்னுமொரு புதிய புரட்சிகரமான சேவையை வழங்கி யதால் Gmail ஐ விடவும் முன்னிற்கிறதோ என எண்ணத் தோன்றுகிறது.

Yahoo mail புதிதாக வழங்கிய சேவை என்ன என்று அறிய ஆவலாயிருக்கிறதா?

Yahoo mail இலிருந்தபடியே, கையடக் கத் தொலைபேசிகளுக்கு இலவசமாகவே SMS செய்திகளை அனுப்பும் வசதியை Yahoo செய்து கொடுத்திருக்கிறது. இனி நாம் விரும்பிய நபர்களுக்கு SMS கூட yahoo mail ஐ பயன்படுத்தி அனுப்பி விடலாம். இந்த வசதி இன்னும் Gmail இல் வரவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஆனாலும், Gmail உம் விரைவில் தன்பங்கிற்கு வித்தியாசமாக ஒன்றைச் செய்யுமென்று திடமாகவே நம்பலாம்.

Yahoo mail beta சேவையை செயற்படுத்தும்போதே இந்த இணைய அரட்டை மற்றும் SMS சேவைகளை பயன் படுத்தக்கூடிய இடைமுகம் தோன்றும்.

SMS அனுப்புதல், கையடக்கத் தொலைபேசி வலையமைப்பின் சேவை வழங்குனர்களுடன் சம்மந்தப்படுவதால், அதனுடன் Yahoo இணக்கப்பாட்டை ஏற்படுத்த வேண்டும். தற்போதைக்கு இந்தியா, கனடா, பிலிப்பைன்ஸ், மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளிலுள்ள கையடக்கத் தொலைபேசிகளுக்கு SMS அனுப்ப முடியும். விரைவில் எல்லா நாடுகளுக்கும் இச்சேவை வழங்கப் படுமென Yahoo தெரிவிக்கிறது. நமது நாட்டுக்கும் விரைவில் வந்துவிடுமென நம்புவோம்.

"புதிய விடயங்கள் யாவற்றையும் கற்றுக்கொள்ள வேண்டுமென அனை வரும் ஆர்வம் காட்டுவதில்லை என்பதால், பயனர்கள் தொடர்ந்தும் தமது பழைய (Classical) இடைமுகத்திலேயே Yahoo mail ஐ கையாளவும் முடியும்" என Yahoo mail இன் உப தலைவர் John Kremer தெரிவிக்கின்றார்.

Yahoo, Google, Microsoft என எல்லோரும் போட்டி போட்டுக்கொண்டு தமது சேவைகளை விருத்தி செய்வது, பயனர்களின் இணைய அனுபவத்தை மெருகூட்டுமென்பதில் சந்தேகமே யில்லை.

Yahoo mail சேவையை 250 மில்லியனுக்குமதிகமான பயனர்கள் பயன் படுத்துகின்றார்கள் என்பது இச்சேவை பற்றிய மேலதிக தகவல். PCT

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவில் இணைய பொலிஸ்

சீனாவில் இணையப் பாவனையைக் கண்காணிக்கும் பணியில் மெய்நிகர் பொலிஸ் காவலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.



சீனாவில் இணைய பொலிஸ் காவலாளர்களை விளம்பரப்படுத்திய பதாகையை படத்தில் காண்கிறீர்கள்.

ZEEZAT

சீனாவின் தலைநகரத்தைச் சேர்ந்த 13 முன்னணி இணைய வழங்கல் நிலையங்களின் தொடர்புகளினால் இணையத்தை உலா வருகையில், 30 நிமிடங்களுக்கு ஒருமுறை கணினித் திரையில் தோன்றி பயனர்களை அறிவுறுத்தும் பணியில் மெய்நிகர் இணைய பொலிஸார் ஈடுபடவுள்ளனர்.

பீஜிங் நகர பாதுகாப்பு பணிவகத்தின் தகவல்படி, China Daily எனும் பத்திரிகையில் வெளியாகியுள்ள செய்தியில் இணைய பொலிஸாரின் நடவடிக்கைகள் விபரிக்கப்பட்டுள்ளன. மூடநம்பிக்கைகளை வளர்த்தல், சூதாட்டம், ஏமாற்றுதல், மற்றும் பாலியல் தொடர்பான விடயங்களைக் கொண்ட இணையத் தளங்களை பயனர்கள் பார்க்கின்றனராஎன்பதைக்கண்காணிக்கும் பணியில் இணைய பொலிஸ் ஈடுபடுமாம்.

"பொதுமக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய மற்றும் சமூக ஒழுக்கங்களை சீர்கெடச் செய்கின்ற தகவல்களை இல்லாதொழிப்பது எமது தலையாய கடமையாகும்" என மேற்படி பணியகத்தின் இணையப் பாதுகாப்பிற்கான துணைத் தலைமை அதிகாரி Zhao Hongzhi தெரிவிக்கின்றார்.

இணைய பொலிஸ் கண்காணிப்புச் செய்யும் பணியில் ஈடுபட்டபோதும், சந்தேகத்திற்கிடமான செயற்பாடுகள் குறித்து பயனர்களும் பணியகத்திற்கு இணையத்தினூடாகவே முறைப்பாடு செய்யவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மெய்நிகர் பொலிஸ் அதிகாரிகள், இணையப் பயனர்களுக்கு எவ்விதத் தீங்கும் ஏற்படாத வகையில் தமது கடமைகளை நேர்மையாக முன்னெடுப்பார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம், Shenzhen என்ற சீன நகரத்தில் முதல் முதலாக இணையப் பாவனையாளர்களின் கணினித் திரையில் மெய்நிகர் பொலிஸ் அதிகாரிகள் தோன்றியிருந்தனர். இவ்வாறு இணைய பொலிஸ் கடமையில் ஈடுபடுத்தப்படுதல், சீனாவின் இணையப் பாவனைக்கான தணிக்கை நடவடிக்கையாகுமென்று விமர்சிக்கப்பட்டதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

சீனாவானது, நவீன தொழில்நுட்பம் மற்றும் மனித வளங்களைப் பயன்படுத்தி இணையப் பாவனையினை அதிகளவில் தணிக்கை செய்து வருவதாக கடந்த பெப்ரவரி மாதம் Reporters Without Borders எனும் ஊடக அமைப்பு அறிக்கை மூலம் குற்றஞ்சாட்டியிருந்தது.

"சீனா, இணையப் பாதுகாப்பிற்கான உபகரணங்கள், மனித வளங்கள், மற்றும் மெய்நிகர் பொலிஸ் என்பவைகளுக்காக மிக அதிகளவான பணத்தை செலவிடுகின்றது" என அந்த அறிக்கை சுட்டிக் காட்டியது.

"சீனாவின் உயர்ந்த அரசியல் செல்வாக்குகளுக்கு மத்தியிலும், இணையம் தொடர்பான தணிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மக்கள் ஆச்சரியமாகவே காண்கிறார்கள். இந்தத் தணிக்கை சார்பான முன்னெடுப்புகள் உலகின் ஏனைய நாடுகளிலும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படலாம்" என அது மேலும் எச்சரித்திருந்தது.

இணையம் என்பது தகவல்களின் சாகரம் என்பதில் இரு வேறு கருத்திருக்காது. ஆனாலும், இங்குள்ள தகவலின் துல்லியத்தன்மை, மற்றும் மூலம் என்பன நாம் எமக்குள் செய்கின்ற தணிக்கைகளின் மூலமே உயர்ந்த நிலையில் கிடைக்கப்பெறும் என நம்ப முடியும். ஆக, புறச்சூழல் தணிக்கைகள் பற்றிய கவலையோ, கவனமோ எம்மிடம் தேவையில்லை. எமது அகச்சூழலில் நாம் கொண்டுள்ள தணிக்கைகளே பொருத்தமான தகவல்களைப் பெறுவதில் உறுதுணையாக அமையும். சக்கரவாகப் பறவை போன்று நாமும் வேறுபிரித்தறிதலில் பாண்டித்தியம் பெறுதல் அவசியமே!


AFP PHTOS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ கணினிப் பாட இணைப்பிதழ்
■ ஒக்டோபர் 2007

PC TIMES

# கணினிக் கல்லூரி




>> See page 17

12 Ms Word
14 Ms Excel
16 ICT for Grade 10 & 11
18 Photoshop
20 GIT
22 Java
24 Help Desk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணங்களை இலகுவில் மிக நேர்த்தியாக வடிவமைப்பதற்கு உதவும் மென்பொருள் இதுவாகும். இதன் மூலம் சிறு கடிதம் முதல் தொட்டு பெரிய நூல்களைக் கூடத் தயார்செய்ய முடியும். கணினியைப் பயன்படுத்தும் சகலரும் அறிந்திருக்கவேண்டிய மென்பொருள் இதுவாகும்.


Microsoft Office
**Word**

# Columns, Drop Cap

*தாரிக்*


இம்முறை நாம் Ms Word இனூடாக நாம் தயாரிக்கும் ஆவணத்தை எவ்வாறு மெருகூட்டலாமென அறிந்து கொள்வோம். கடந்த இதழில் Borders and Shading என்ற தெரிவைப் பயன்படுத்தி ஆவணங்களில் மெருகூட்டல் செய்வது தொடர்பில் ஆராய்ந்தோம்.

சஞ்சிகைகள், பத்திரிகைகளில் காணப்படும் பக்கங்களில் எழுத்துக்கள் நிரல் நிரலாக அமைந்திருப்பதைக் கண்டிருப்பீர்கள். இவ்வாறு ஆவணத்தில் Ms Word ஐ பயன்படுத்தி நிரல்களை அமைப்பது எப்படி எனப் பார்ப்போம்.





நிரல்களை இலகுவாக ஆவணத்தில் ஏற்படுத்த, Standard tool bar இல் காணப்படும் Button ஐ கிளிக் செய்து நிரல்களின் எண்ணிக்கையை தேர்ந்தெடுக்கலாம். இதன்போது, சம அளவுள்ள நிரல்கள் ஆவணத்தில் உருவாகியிருக்கக் காணலாம். ஆனால், எமக்குத் தேவையான அளவில் நிரல்களை எவ்வாறு Ms Word இன் மூலம் அமைப்பது என்பதைப் பார்ப்போம்.


இதற்காக Format Menu இலுள்ள Columns எனும் தெரிவை Select செய்யவேண்டும் இதன்போது, Columns எனும் தலைப்பில் அமைந்த Dialog box ஒன்று காட்சியாகும். இதில் ஏற்கனவே வடிவமைக்கப்பட்ட 5 வகையான மாதிரி நிரல்கள் Preset ஆகக் காணப்படும். இதில் விரும்பியதைத் தெரிவு செய்யலாம். அல்லது நாம் விரும்பும் அளவுகளை Number of Columns மற்றும் Width and Spacing என்ற பண்புகளின் எதிரே காணப்படும் இடைவெளிகளில் வழங்குவதன் மூலம் எமக்கு விரும்பிய வகையில் ஆவணத்தில் நிரல்கள் அமையவேண்டிய அளவையும் அமைவையும் தீர்மானிக்கலாம்.




அத்தோடு, நாம் வழங்கவுள்ள நிரல் அமைப்பானது மொத்த ஆவணத்திற்கும் அமைய வேண்டுமா? அல்லது, நாம் நிரல் அமைப்பை வழங்கும் குறித்த பக்கத்திலிருந்து பின்னால் செல்லும் ஏனைய பக்கங்களுக்கு இடப்பட வேண்டுமா? என்பதையும் Columns dialog box இல் காணப்படும் Apply to எனும் தெரிவின் எதிரே காணப்படும் Drop-down menu விலுள்ள பண்புகளை தெரிவு செய்வதன் மூலம் சாத்தியமாக்கலாம்.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




இந்த Ms word பற்றிய கட்டுரையில் முதலாவது தொடங்கும் வசனத்திலுள்ள 'இ' என்பது பெரிதாக காட்டப்பட்டிருப்பதைக் காணுங்கள். இதனை Drop Cap என அழைப்போம். இந்த Drop Cap ஐ எவ்வாறு Ms word மூலம் ஆவணத்திலிடலாமெனப் பார்ப்போம்.

இதற்காக, Format Menu விலுள்ள Drop Cap எனும் தெரிவை Select செய்ய வேண்டும். இதன்போது, Drop Cap எனும் தலைப்பிலமைந்த dialog box காட்சியாகும். இதில் Position என்ற பிரிவில் Drop Cap எங்கு அமையவேண்டுமென்பதைத் தெரிவு செய்யலாம், அத்தோடு, Option எனும் பகுதியில் Drop Cap ஆக அமையவேண்டிய Font இன் வடிவத்தையும், Drop Cap எத்தனை வரிகளுக்கு அமைய வேண்டுமென்பது போன்ற விடயங்களை தெரிவு செய்து, ஆவணத்தில் Drop Cap ஐ இலகுவாகச் சேர்த்துக் கொள்ள முடியும்.

நீங்களும் முயற்சி செய்துதான் பாருங்களேன்! உங்கள் ஆவணங்களையும் மிகவும் இலகுவாக நேர்த்தியாக அமைத்துக் கொள்ள முடியும்.

தகவல் தொழில்நுட்பத்தின் உயிர்ப்பான மாற்றங்களை உடனுக்குடன் அறிந்திட

PCTIMES

கட்டாயம் வாசியுங்கள்

*Visit* www.pctimes.lk

# WIN FREE SUBSCRIPTIONS

- *கடந்த மாத கேள்விக்கான விடை*

Brain (மூளை) எனப்படும் கணினி வைரஸ் 1986 ஆம் ஆண்டு பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த இரு சகோதரர்களால் கண்டு பிடிக்கப்பட்டது.

- *ஓகஸ்ட் மாத வெற்றியாளர்கள்*

M. கங்காசுதன்,
32, பழைய கல்முனை வீதி,
கல்லடி,
மட்டக்களப்பு.

M.R. இஸ்ஸத் றிஸ்னா,
05, ஜயரட்ன வீதி,
நீர்கொழும்பு.

M.A.M. ஆதில்,
24/B, அலன்துவக்க,
பிலிமத்தலாவை.

D.K. ஹிமாஸ் கான்,
290/5, தர்கா மாவத்தை,
யோனகபுர, திக்குவல்லை.

K. சங்கீத்,
கடற்கரை வீதி,
தாண்டியடி,
கோமாரி.

M. சிவகுமாரன்,
34/19, மேல்மாடி வீதி,
நாவற்குடா,
மட்டக்களப்பு.

M.N. துபய்ல்,
61, மஹமூது ஆலிம் இடம்,
புத்தளம்.

M.A.M. சியான்,
120, மபூர் கிரசன்ட்,
களுத்துரை.

E. மனோஜ் நிரோசன்,
C/O, D. சீலா மாக்ரட்,
37, கரவகெட்டியவத்தை,
பலாங்கொடை.

A.F. பஹத் அஹமட்,
முனைச் சேனை -04,
கிண்ணியா.

- *வெற்றியாளர்களுக்கு நவம்பர் மாதம் முதல் மூன்று மாதங்களுக்கான தமிழ் PCTIMES சஞ்சிகை தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.*

- *விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:*

*Win PC Times*
*PC Times Magazine,*
*Wijeya Newspapers Ltd.,*
*No. 08, Hunupitiya Cross Road,*
*Colombo -02.*

- *இம் மாதத்திற்கான கேள்வி:*

Core 2 Duo மற்றும் Dual Core ஆகியவற்றுக்கிடையிலான, தொழில்நுட்ப ரீதியான பிரதான வித்தியாசம் என்ன?

- *கேள்விக்கான விடையை தபால் அட்டையில் அல்லது pctimes@wijeya.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு ஒக்டோபர் 24 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணித்தல் தொடர்பில் அதிகம் பிரசித்தமான மென்பொருள் இதுவாகும். இந்த மென்பொருளை உபயோகித்தே அநேகமான வரவுசெலவுகள் பதிவுசெய்யப்படுகின்றன. இதன் செயற்பாடுகளை அறிந்திருப்பதன் மூலம் திட்டமான வாழ்க்கை முறையை உருவாக்கிக் கொள்ளலாம்.

Microsoft Office

**Excel**


# வரிசையாக்கம் செய்தல்

*தாரிக்*

கடந்த இதழில் புள்ளி விபரங்களை எவ்வாறு எமக்கேற்ற வகையில் நேர்த்தியாக ஒழுங்கமைத்துக் கொள்வதெனவும், அங்கு எவ்வகையான நிபந்தனைச் சமன்பாடுகளை பாவிக்க வேண்டும் என்பது தொடர்பிலும் விரிவாக ஆராய்ந்தோம். அந்தத் தகவல்கள் மற்றும் தரவுகளை இன்னும் Interactive கொண்ட நிலைகளுக்கு Ms Excel ஐ உபயோகம் செய்து மாற்ற முடியும்.


நாம் ஏற்கனவே முந்திய இதழ்களில் கற்றுந்தந்த Ms Excel இன் செயற்பாடுகள் பலவற்றையும், குறித்த புள்ளிகளைக் கொண்ட தரவுக்கு பிரதியிட்டு, தரவுகளைச் செம்மையான முறையில் எடுத்துக்கொள்ள முடியும். குறிப்பாக, ஒவ்வொரு மாணவரும் பெற்ற புள்ளிகளை வெவ்வேறு வகையான வரைபுகளில் குறித்துக் காட்டலாம். இவ்வாறு Ms Excel இன் மூலம் இலகுவாக அமைத்துக் கொள்ள முடிவதோடு, குறித்த தரவுகளை வரைபுகளூடாகக் காணும்போது தரவுகள் பற்றிய தெளிவான கிரகித்தலுக்கு வழிகோலும்.

இனி, இந்த இதழில் தரவுகளை சீரான வரிசையாக்கம் (Sorting) செய்வது எவ்வாறென ஆராய்வோம். அதிகளவான தரவுகள் காணப்படும்போது, அவற்றைச் சரியான முறையில் ஒழுங்குபடுத்தும்போதே, அவற்றிலிருந்து பொருத்தமான தீர்மானங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். பொதுவாக வரவு செலவுக் குறிப்புகள், மாணவர்களின் தரங்கள், வரவுக்குறிப்புகள் மற்றும் ஆய்வொன்றிலிருந்து கிடைக்கப்பெற்ற தரவுகள் போன்றவைகளை சீராக வரிசையாக்கம் செய்யும்போதே, அந்தத் தரவுகள் மூலம் கிடைக்கப்பெறும் விடயங்களை எளிதில் அறிந்து கொள்ள முடியும்.





Ms Excel இல் வரிசையாக்கம் செய்வதற்காக இரண்டு வழிமுறைகள் காணப்படுகின்றன. அதில் ஒன்று, Standard tool bar இல் காணப்படும் இரு Button களை கிளிக் செய்வதால், வரிசையாக்கம் செய்தல். மற்றையது, Data என்ற Menu bar இல் காணப்படும் Sort என்ற தெரிவை Select செய்வதனால் Sort செய்வதுமாகும்.

உங்கள் ஆவணத்தைப் பொறுத்தே, நீங்கள் வரிசையாக்கம் செய்யத் தேர்ந்தெடுக்கும் முறையும் வேறுபடும். தரவுகளின் அமைப்பு, தரவுகள் ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ள நிரல்களின் எண்ணிக்கை என்பன இதில் ஆதிக்கம் செலுத்தும்.




வரிசையாக்கம் செய்வதற்கு முன்பாக, உங்கள் ஆவணத்தை தனியாக Save செய்து கொள்ளுதல் சமயோசிதமானதாகும். இதன்மூலம், முதல் பிரதி அழிந்து போவதைத் தவிர்க்க முடியும். இனி நாம் Data Menu வில் காணப்படும் Sort என்ற தெரிவைப் பயன்படுத்தி வரிசையாக்கம் செய்வது எவ்வாறென கண்டு கொள்வோம். சாதாரணமாக உங்கள் தரவுகள் ஒன்றுக்கு மேற்பட்ட நிரல்களில் ஒழுங்குபடுத்தப்பட்டுக் காணப்படும்போதே, Sort என்ற தெரிவைப் பயன்படுத்தல் உஷிதமானதாகும். நீங்கள் ஒழுங்குபடுத்த வேண்டிய நிரல்களை தெரிவுசெய்ததன் பிற்பாடு, Data Menu இலுள்ள Sort எனும் தெரிவை கிளிக் செய்ய வேண்டும். இதன்போது, Sort எனும் தலைப்பிலமைந்த Dialog box காட்சியாகும். இதில், உங்கள் தரவுகளில் காணப்படும் நிரல்கள் தலைப்புகளைக் கொண்ட வகையிலுள்ள, Drop down menu காட்சியாகும். இதில் தலைப்பைத் தெரிவு செய்து, அந்த நிரலில் காணப்படும் தரவுகள் ஏறுவரிசைப்படுத்த வேண்டியதா அல்லது இறங்கு வரிசைப்படுத்த வேண்டியதாக என்பதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தெரிவு செய்து கொள்ள முடியும். இப்படி நீங்கள் தெரிவு செய்த அத்தனை Column களையும் வரிசையாக்கம் செய்து கொள்ளலாம். நீங்களும் உங்கள் ஆவணங்களை வரிசையாக்கம் செய்து பயிற்சி பெறலாம்!





*Visit* www.pctimes.lk

Diploma in Computer Hardware
Diploma in Computer Studies
Diploma in Desktop Publishing
Diploma in MS Office
Web Designing
Multimedia
(3D max,Maya)

abe
Business Administration( UK)
Association of Business Executives
Advanced Diploma
Diploma II
Diploma I
HIGHLY QUALIFIED & EXPERIENCED PANEL OF LECTURES
FREE CD'S
JOB ORIENTED
LAB FACILITIES
UNLIMITED PRACTICAL
EASY PAYMENT SCHEMES

MCSE
(Microsoft Certified System Engineer)
MCSA
(Microsoft Certified System Administrator)
MCP
(Microsoft Certified Professional)

HAND PHONE
REPAIRING Courses
Tone Setting, Fault Finding, Flashing,
IC Rebolding & Replacing, Unlocking,
Board Testing Trouble Shooting,
Downloading & Uploading Software,
Bluetooth,Infrared & MMC
DURATION : 1 MOUNTH

தூர இடங்களிலிருந்து வருபவர்களுக்கு தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்

Genaral English / IELTS
FOR YOUR CONVENIENCE, WEEK DAYS AND WEEK END CLASSES AVAILABLE

ALL BRIGHT COLLEGE

KANDY
99/1,D.S.Senanayake Veediya,Kandy
Tel : 081-2202959 ,081-5671255.
E-mmail:info@allbrightcollege.com.

KEGALLE
NDS(All Bright College)
156,Main Street,Kegalle
Tel : 035-4925333
Web:allbrightcollege.com


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ICT

மாணவர்களுக்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான பொதுவான அறிவை வழங்குவதற்கும், பிற்காலத்தில் தகவல் தொழில்நுட்பத் துறையில் மேற்படிப்புகளை மேற்கொள்வதற்கான அடித்தளத்தை உருவாக்குவதை இலக்காகக் கொண்டும், 2007 ஆம் ஆண்டின் புதிய கல்விச் சீர்த்திருத்தம் மூலமாக, கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரண தரத்தில் ஒரு பாடமாக ICT (Information Communication Technology) எனும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது.



# தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல்

# Information & Communication Technology

## FOR GRADE 10 & 11

*ZEEZAT*

கடந்த இதழில் தர்க்கப்படலைகள் பற்றியும், அவை ஒவ்வொன்றினதும், மெய் அட்டவணைகள் பற்றியும் விரிவாக அறிந்து கொண்டோம். இந்த இதழில், எளிய சுற்றொன்றை அமைப்பது தொடர்பில் ஆராய்வோம்.

ஐந்து வகையான தர்க்கப்படலைகள் பற்றிய தெளிவு இப்போது உங்களிடம் இருக்கும். இந்த அடிப்படையான விடயத்தை வைத்துக் கொண்டு நாம் மெய் அட்டவணைகளையும், தர்க்கப் படலைகளையும் தொடர்புபடுத்தி ஆராய்வோம்.

AND Gate ஒன்றின் மெய் அட்டவணையை நீங்கள் அவதானிக்கும் போது, அதன் பெறுபேறுகள் இரண்டு உள்ளீடுகளையும் பெருக்குவதால் பெறப்படுவது போன்று தோன்றும்.

| AND | | |
|---|---|---|
| A | B | A.B |
| 0 | 0 | 0 |
| 0 | 1 | 0 |
| 1 | 0 | 0 |
| 1 | 1 | 1 |

$0 \times 0 = 0$

$0 \times 1 = 0$

$1 \times 0 = 0$

$1 \times 1 = 1$

இதேபோலவே, OR Gate இனது மெய் அட்டவணையை அவதானிக்கையில் அதன் உள்ளீடுகளின் துவித எண், பெறுமானம் கூட்டப்படுவது போன்று காட்சியளிக்கும்.

| OR | | |
|---|---|---|
| A | B | A+B |
| 0 | 0 | 0 |
| 0 | 1 | 1 |
| 1 | 0 | 1 |
| 1 | 1 | 1 |

$0 + 0 = 0$


$0 + 1 = 1$

$1 + 0 = 1$

$1 + 1 = 1$

இதிலிருந்து உள்ளீடுகளாக வழங்கப்படும் துவித எண் பெறுமானங்களின் வித்தியாசமான முறையில் ஒழுங்கமைக்கப்பட்ட பெறுபேற்று நிலைகளே வெவ்வேறு தர்க்கப்படலைகளில் கிடைக்கப்பெறுகின்றது என அறிந்து கொள்ள முடியும்.

இப்போது நாம் சில எளிய சுற்றுக்களை உருவாக்குவது எப்படி என ஆராய்வோம்.





மேலே காட்டப்பட்டுள்ள Not Gate இனது A எனப்படும் Input இன் மூலம் பெறப்படும் Output ஆனது $\bar{A}$ என குறிக்கப்படலாம். அதேபோல B எனப்படும் Input இன் மூலம் பெறப்படும் Output ஆனது $\bar{B}$ என குறிக்கப்படலாம். இங்கு கிடைக்கப்பெறும் பெறுபேறுகளை நினைவில் நிறுத்தி AND Gate இன் ஊடாக செல்லும் இரண்டு Input களையும் வெவ்வேறாக அடையாளப்படுத்துவோம்.

இதன் பிற்பாடு, AND Gate இலிருந்து வெளியாகும் Output களையும் குறிப்போம். இவை OR Gate இனூடாக சென்று, எவ்வாறு மாற்றமடைந்து பெறுபேறுகளாகப் பெறப்படுகின்றன என்பதனையும் குறிப்போம். இவ்வாறு செய்கின்றபோது, மேலேயுள்ள சுற்றையும், அதன் மெய் அட்டவணையையும் தெளிவாக உருவாக்கிக்கொள்ள முடியும்.

| A | B | $\bar{A}$ | $\bar{B}$ | $\bar{A}B$ | $A\bar{B}$ | $\bar{A}B + A\bar{B}$ |
|---|---|---|---|---|---|---|
| 0 | 0 | 1 | 1 | 0 | 0 | 0 |
| 0 | 1 | 1 | 0 | 1 | 0 | 1 |
| 1 | 0 | 0 | 1 | 0 | 1 | 1 |
| 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 |


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மேலே காட்டப்பட்டுள்ள சுற்றை மிகத்தெளிவாக அறிந்து கொண்டதன் பிற்பாடு, கீழே காட்டப்பட்டுள்ள சுற்றின் Inputs மற்றும் Outputs ஆகியவற்றை சில படிமுறைகளைக் கொண்டு அறிந்துகொள்வதெப்படி என பார்ப்போம்.





சுற்றில் மேலுள்ள AND Gate இனூடாகச் செல்லும் Inputகள் $\bar{A}$ உம் $\bar{B}$ உம் ஆகும். கீழுள்ள AND இனூடாகச் செல்லும் Inputகள் A உம் B உம் ஆகும். இதன்படி, இங்குள்ள AND Gate களினூடாகச் வெளியாகும் Outputகள், OR Gate இனூடாகச் சென்று என்ன output ஆக மாறும் என்பதை உங்களால் அறிந்து கொள்ள முடிகிறதா? இந்தச் சுற்றின் மெய் அட்டவணையை வரைய உங்களால் முடிகிறதா? முயற்சி செய்து பாருங்கள். மிகவும் இலகுவான விடயமாகும்.

நாம் இன்னொரு சுற்றைப் பற்றியும் பார்ப்போம். இச்சுற்றின் மெய் அட்டவணையை குறைந்த படிமுறைகளினால் எழுதுவதெவ்வாறு என ஆராய்வோம்.





சுற்றில் மேலுள்ள And Gate இனூடாக A மற்றும் B எனும் இரு Inputs நுழைகின்றன. இதன்படி, இதிலிருந்து வெளியாகும் AB எனும் Output ஆனது இறுதியில், காட்டப்பட்டுள்ள OR Gate இனது முதலாவது Input ஆகும். கீழுள்ள AND இனூடாகச், $\bar{A}$ மற்றும் $\bar{B}$ ஆகிய Inputs நுழைகின்றன. இதன்படி, இதிலிருந்து Output ஆகப் பெறப்படும் $\bar{A}\bar{B}$ என்பது, OR Gate இன் இரண்டாவது Input ஆகும். ஆக, சுற்றின் இறுதிப்பெறுபேறு $AB + \bar{A}\bar{B}$ என்பதாகும்.

இந்தச் சுற்றுக்கான மெய் அட்டவணையை எழுத முயற்சி செய்யுங்கள். அதுவும் மிகவும் இலகுவானதுதான்! PCT





| A | B | C | AB | AC | AB + AC |
|---|---|---|---|---|---|
| 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| 0 | 1 | 0 | 0 | 0 | 0 |
| 0 | 1 | 1 | 0 | 0 | 0 |
| 1 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 1 | 0 | 1 | 0 | 1 | 1 |
| 1 | 1 | 0 | 1 | 0 | 1 |
| 1 | 1 | 1 | 1 | 1 | 1 |




| A | B | C | A | B + C | A(B + C) |
|---|---|---|---|---|---|
| 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 0 | 0 | 1 | 0 | 1 | 0 |
| 0 | 1 | 0 | 0 | 1 | 0 |
| 0 | 1 | 1 | 0 | 1 | 0 |
| 1 | 0 | 0 | 1 | 0 | 0 |
| 1 | 0 | 1 | 1 | 1 | 1 |
| 1 | 1 | 0 | 1 | 1 | 1 |
| 1 | 1 | 1 | 1 | 1 | 1 |

## சிறியது + வேகமானது



கணினி நினைவக சில்லுகளை (Computer Memory Chips) உருவாக்கும் நிறுவனங்களில், உலகின் இரண்டாவது மிகப்பெரிய நிறுவனமான தென் கொரியாவின் Hynix Semiconductor நிறுவனமானது, உலகிலேயே மிகச் சிறிய, மிக வேகமான ஒரு ஜிகா பைட் Chip ஐ உருவாக்கியுள்ளது. இவை கையடக்கத் தொலைபேசிகளில் பயன்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. இந்த Chip ஆனது, செக்கனுக்கு 1.6 gigabytes தரவுகளை பரிகரணம் செய்யக் கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த Chip 2008 இன் ஆரம்ப பகுதியில் அதிகளவில் உற்பத்தி செய்யப்படவுள்ளது. PCT

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிழற்படங்களில் எண்ணிலடங்கா மாற்றங்களைச் செய்து நேர்த்தியான நிழற்படங்களை வருவிளைவாகப் பெற்றுக்கொள்ள பொருத்தமான மென்பொருள் இதுவாகும். இதில் காணப்படுகின்ற மென்கருவிகளை உபயோகித்து எமது சிந்தனைக்கு எட்டுவதையெல்லாம் செதுக்கி விடலாம்.

Adobe Photoshop

# வர்ணத்தை மாற்றலாம்

# CHANGING DRESS COLOR

நப்லி இப்ஹாம்

Photoshop இன் மூலம் எண்ணிலடங்கா புதுமைகளை செய்ய முடியும் என்பதை தொடர்ச்சியாக கற்று வருகின்றீர்கள். அந்த வகையில் இவ்விதழில் நிழற் படம் ஒன்றில் நிகழ்த்தக் கூடிய இன்னுமொரு புதுமையினை அறிமுகப்படுத்த உள்ளோம். அதாவது நிழற்படம் ஒன்றில் காணப்படும் யாராவது ஒருவர் அணிந்துள்ள Dress இன் நிறத்தினை எமக்குத் தேவையான விதத்தில் மாற்றிக் கொள்ளாம்.


இதற்காக முதலில் உங்கள் நிழற் படத்தினை open செய்து கொண்ட பின்னர் கீழ் வரும் படிமுறைகளை மேற் கொள்ளுங்கள்.



1




2




3

Layer → New Adjustment Layer → Hue / Saturation இதன் போது தோன்றும் Dialog Box இனுள் Name இற்கு நேராக ஏதாவது ஒரு பெயரினை வழங்கி Ok செய்த பின்னர் தோன்றும் Dialog Box இனுல் Hue இற்கு நேராக -180 எனவும் Saturation இற்கு நேராக -100 எனவும Type செய்து Ok Button ஐ Press பண்ணவும். பிறகு Eraser Tool (E எனும் Key இனை Press பண்ணுவதாலும் Eraser Tool இனை பெற்றுக்கொள்ள முடியும்) இனை பயண்படுத்தி நிறம் மாற்றப்பட வேண்டிய இடம் தவிர்த்து ஏனைய பகுதிகளை கவனமாக அழித்துவிட வேண்டும்.

Eraser Tool இனை பயண்படுத்ததும் போது வட்ட வடிவான பகுதியை தேவைக்கு ஏற்ப கூட்டிக் குறைத்துக் கொள்ளலாம். இச்செய்கையை மேற்கொள்ள Short Cut key ஆக 1) வட்டத்தை பெரிதாக மாற்ற ] எனும் Key இனையும், 2) வட்டத்தை சிறிதாக மாற்ற [ எனும் Key இனையும் பயன்படுத்தலாம். மிகச்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




செம்மையாக மேற்கொள்ளவேண்டிய தேவை ஏற்படும்போது Zoom Tool இனை பயன்படுத்தலாம்.


தேவையற்ற பகுதிகளை அழித்த பின்னர் உரு 04 இல் காட்டப்பட்டுள்ள இடத்தினுள் Double Click செய்து மீண்டும் Hue/Saturation எனும் Dialog Box இனை Open செய்து கொள்ளுங்கள். வேறு எந்த விதத்திலாவது Hue/Saturation எனும் Dialog Box இனை Open செய்வதன் மூலம் இதனை மேற்கொள்ள முடியாது. உரு 04 இல் காட்டப்பட்டுள்ள இடத்தினுள் Double Click செய்துதான் Dialog Box இனை Open செய்ய வேண்டும்.










இங்கே தரப்பட்டுள்ள உதாரணத்தில் இவ்விதமாக திரும்பவும் Open செய்த Hue/Saturation எனும் Dialog Box இல் Hue இனையும் Saturation இனையும் மாற்றி அமைப்பதன் மூலம் பல நிறங்கள் பெறப்பட்டுள்ளதை கீழே தரப்பட்டுள்ள உருக்களின் மூலம் அவதானிக்க முடியும். இவ்விதமாக நீங்களும் உங்கள் நிழற்படத்தில் பல வித்தைகளை மேற்கொள்ளலாமே.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



நவீன தொழில்நுட்பத்தால் ஏற்பட்டுள்ள சவால்களை எதிர்கொள்வதற்கு அவசியமான அறிவை மாண வர்களுக்கு வழங்கும் பொருட்டு பாடசாலைகளில் கற்பிக்கப்படும் பாடவிதானமே இதுவாகும். இப் பாடவிதானத்தில் உள்ள விடயங்கள் மாணவர்களுக்கு மட்டுமன்றி அனைத்துத் தரப்பினருக்கும் மிகவும் பிரயோசனமானதாகும்.

GIT


# பொதுத் தகவல் தொழில்நுட்பவியல்
# General Information Technology

*Tharique*

- Viruses can be transmitted from one system to another through various media types such as;
- கணினி வைரஸ்கள் ஒரு குறிப்பிட்ட கணினியிலிருந்து இன்னொரு கணினிக்கு பல ஊடகங்கள் மூலமாகப் பரவுகின்றன. அவையாவன.
  - ♦ Floppy disks
  - ♦ நெகிழ் வட்டுகள்
  - ♦ Flash Drives (Pen Drive)
  - ♦ துரித தட்டுகள்
  - ♦ Internet
  - ♦ இணையம்
  - ♦ Software
  - ♦ மென்பொருள்

## Virus Symptoms
## வைரஸ் தொற்றலுக்கான அறிகுறிகள்

- Some of the symptoms that a computer will show up when infected with a virus are listed below.
- தொற்றுக்குள்ளான கணினியானது, பின்வரும் அறிகுறிகளில் ஒன்றை அல்லது பலதைக் காண்பிக்கும்.
  - ♦ Programs take long time to load than normal.
  - ♦ செய்நிரல்கள் தொடங்குவதற்கு வழமையை விட அதிக நேரமெடுத்தல்.
  - ♦ Computer's hard drive constantly runs out of free space.
  - ♦ கணினியின் வன்தட்டானது அடிக்கடி கொள்ளளவுக் குறைபாட்டைக் காட்டும்.
  - ♦ The floppy disk drive or hard drive runs when you are not using it.
  - ♦ நெகிழ் வட்டு அல்லது வன் தட்டு அதை இயக்காமலேயே இயங்கத் தொடங்கும்.
  - ♦ New files keep appearing on the system and you do not know where they came from.
  - ♦ புதிய கோப்புகள் கணினியில் தோன்றும். அவை எங்கிருந்து உருவாகின்றதென உங்களுக்கே தெரியாது.
  - ♦ Strange sounds or beeping noises come from the computer or keyboard.
  - ♦ வித்தியாசமான ஒலிகள் கணினியிலிருந்து அல்லது விசைப்பலகையிலிருந்து கேட்கும்.
  - ♦ Strange graphics are displayed on your computer monitor.
  - ♦ கணினித் திரையில் வித்தியாசமான வரைபியல்கள் தோன்றும்.
  - ♦ Files have strange names you do not recognize.
  - ♦ அறிந்து கொள்ள முடியாத வகையில் கோப்புகள் பெயர்களைக் கொண்டிருக்கும்.
  - ♦ Program sizes keep changing.
  - ♦ செய்நிரல்களின் அளவுகள் தொடர்ந்தும் மாறிக் கொண்டிருக்கும்.
  - ♦ Programs act erratically.
  - ♦ செய்நிரல்கள் விரும்பத்தகாத வகையில் செயற்படும்.




## Components of a Virus
## வைரஸொன்றின் உள்ளடக்கங்கள்

- A virus comprises of four general components
- வைரஸொன்றானது, பொதுவாக நான்கு பகுதிகளைக் கொண்டுள்ளது.
  - ♦ The replicator (or engine): replicates the virus.
  - ♦ தற்பகர்ப்பி (அல்லது இயந்திரம்): வைரஸை தற்பகர்ப்புச் செய்யக்கூடியது.
  - ♦ The safeguard : prevents the detection and the removal of the virus
  - ♦ பாதுகாப்பு கவசம்: வைரஸைக் கண்டு பிடிப்பதையும், அதை அழிப்பதையும் தடுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- The trigger monitor : Monitors for a specific condition to deliver payload.
- விசை வில் தெரிவிப்பி: குறித்த நிலைமைகளில் வைரஸை தொழிற்படுவதற்கான நிலையைத் தோற்றுவித்தல்.
- The payload : propagation of the virus.
- விஸ்தரிப்பாக்கி: வைரஸை விஸ்தரிக்கச் செய்யல்

## Main Phases of Virus Activity

## வைரஸ் தொழிற்பாட்டின் முக்கிய அவத்தைகள்

- The main phases a virus generally follows are;
- வைரஸொன்றின் முக்கிய அவத்தைகளாக பின்வருவன அமையும்.
  - Gains access to the system
  - கணினியிற்கு பெறுவழியை அடைதல்
  - Lies dormant
  - உறங்கு நிலையில் இருத்தல்
  - Propagates
  - பரவலடைதல்
  - Virus is triggered by some event
  - சில நிகழ்வுகளால் வைரஸ் தூண்டப்படல்
  - Virus Action
  - வைரஸின் தொழிற்பாடு

## Main Types of Virus

## வைரஸின் பிரதான வகைகள்

- There are three main types of viruses
- மூன்று வகையான வைரஸ்கள் காணப்படுகின்றன.
  - Boot Virus
  - தொடங்கு வைரஸ்
  - File Virus
  - கோப்பு வைரஸ்
  - Macro Virus
  - பெரும் வைரஸ்

## Boot Virus

## தொடங்கு வைரஸ்

- Boot virus infects the boot sector of the hard disk and is activated every time the computer is switched on. Once infected, the computer may fail to start properly.
- கணினியின் வன்தட்டின் தொடங்கு நிலைப் பகுதியில் தொற்றிக் கொள்ளும் இவ்வகையான வைரஸ்கள் கணினியை தொடங்கும் ஒவ்வொரு வேளையும் அதன் செயற்பாட்டை ஆற்றத் தொடங்கும். தொற்றுக்குள்ளான கணினியானது, முறையாக ஆரம்பமாவதில் தடங்கல்களை எதிர்நோக்கும்.
- Usually boot viruses spread from the boot sectors in floppy diskettes to the boot sector of the hard disk. Once infected, the virus may remain in the main memory and infect other diskettes.
- நெகிழ்வட்டுக்களின் தொடங்கு நிலைகளில் இருந்து வன்தட்டின் தொடங்கு நிலைகளுக்கு வழமையாக இதன் பரவல் இடம் பெறும். ஒருதடவை தொற்றுக்குள்ளாகும்போது, அவை கணினியின் பிரதான நினைவகத்தில் சேமிக்கப்பட்டு ஏனைய தட்டுகளுக்கும் தொற்றும் தகவுடையது.



## File Virus (Parasitic Virus)

## கோப்பு வைரஸ் (ஒட்டுண்ணி வைரஸ்)

- File viruses are virus programs attached to executable files. They become active every time the program is executed.
- நிறைவேற்றத்தகு கோப்புகளுடன் இணைந்த நிலையில் காணப்படும் வைரஸ்களே கோப்பு வைரஸ்கள் எனப்படும். இவை செய்நிரலை செயற்படுத்தும் ஒவ்வொரு நிலையிலும், செயற்பாட்டைத் தொடங்கும்.

## Macro Virus

## பெரும் வைரஸ்

- A macro is a collection of application specific instructions coded to automate some manual process such as formatting a word document.
- ஒரு வேர்ட் ஆவணமொன்றை முற்றாக மாற்றக்கூடியது போன்ற அறிவுறுத்தல்களை உள்ளடக்கிய செய்நிரல்களின் தொகுப்பே இந்த பெரும் வைரஸ்களாகும்.
- Once a computer is infected with a macro virus the following actions may result.
- பெரும் வைரஸ் தொற்றுக்குள்ளான கணினியில் பின்வரும் செயற்பாடுகள் இடம்பெறலாம்.
  - Unusual messages
  - வழக்கத்திற்கு மாறான செய்திகள்
  - Save data in unintended formats
  - பொருத்தமற்ற வடிவமைப்புகளில் தரவுகள் சேமிக்கப் படல்
  - Lost data
  - தரவுகளில் இழப்பு ஏற்படல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணினியின் எல்லாத் தளமேடைகளிலும் இயங்கக்கூடிய வகையில் அமைந்த மென்பொருள்களை உருவாக்க மிகச் சிறந்த கணினிமொழி ஜாவா ஆகும். இம் மொழி தொடர்பான அறிவைப் பெற்றிருத்தல் கணினி, இணைய நிலைகளில் செயற்படக்கூடிய வினைத்திறனான மென்பொருள்களை உண்டாக்கும் திறனை வளர்க்கும்.

# கணினி மொழியின் அரசன் - JAVA

*M.L.M. இர்ஷாட்*

## ஜாவா தரவுத்தள இணைப்பு (Java DataBase Connectivity)


கடந்த இதழில் நாம் நிகழ்வுகளை கையாள்வது (event handling) எவ்வாறு என்பது பற்றிய விடயங்களை பார்த்தோம். இனி ஜாவா தரவுத்தள இணைப்பு (java database connectivity) பற்றி ஆராய்வோம்.

## தரவுத்தளம் (DataBase)

தரவுத்தளம் என்பது தரவுகள் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் ஒரு இடத்தை குறிக்கும். கணனியில் தரவுகளை சேமித்து வைப்பதற்கென்று பல பிரத்தியேக மென்பொருள்கள் காணப்படுகின்றன. இவற்றில் பரவலாக Microsoft தயாரிப்புகளான MSSQL, MSAccess என்பனவற்றுடன் Open source மென்பொருளான MySQL, Oracle என்பனவும் பயன்படுத்தப்படுகின்றன. (இங்கு நாம் எமது தரவுகளை சேமிப்பதற்காக MS Access தரவுத்தளத்தை பயன்படுத்தவுள்ளோம்). தகவல் தளங்களில் தகவல்கள் அட்டவணைகள் (table) மூலமே சேமிக்கப்படுகின்றன. குறிப்பிட்ட தரவுத்தள மென்பொருள்களை கணனியில் நிறுவி அவற்றின் மூலம் இவ்வட்டவனைகளை உருவாக்கி தகவல்களை சேமிக்கவோ சேமித்த தரவுகளை மீளப்பெற்றுக்கொள்ளவோ முடியும்.


Microsoft Access ஐ பயன்படுத்தி அட்டவணையொன்றை (Table) உருவாக்கல்

Start Manu ஐ சொடுக்கி பெறப்படும் menu வில் Microsoft Access என்பதை தெரிவுசெய்ய MSAccess தரவுத்தளம் பெறப்படும். அதில் File சென்று New எனபதை தெரிவுசெய்ய தோன்றும் சாரளத்தில் blank database என்பதை தெரிவுசெய்யவும் (படம் -01).




1

பின்னர் தோன்றும் சாரளத்தில் database ஐ save செய்வதற்கான இடத்தை தெரிவுசெய்து File name ஒன்றை வழங்கி Save செய்யவும். (படம் -02).




2

இப்போது தோன்றும் சாரளத்தில் Create table in design view என்பதை Click செய்யவும் (படம் -03).




3

## கணினியின் வருகைக்கு முன்னர்...




Memory என்பது வயதோடு குறைந்து செல்லும் பண்பாகும்.
Application என்பது தொழிலுக்காக செய்யும் விண்ணப்பமாகும்.
Program என்பது தொலைக்காட்சி நிகழ்ச்சியாகும்.
Keyboard என்பது பியானோவில் இருப்பதாகும்.
Web என்பது சிலந்தியின் வீடாகும்.
Virus என்பது காய்ச்சலை ஏற்படுத்தும் நுண்ணுயிராகும்.
Hard drive என்பது வீதி வழியாகச் செய்யும் நெடுந்தூரப் பயணமாகும்.
Mouse Pad என்பது எலி வாழும் இடமாகும்.

*காலம் மாறிப்போச்சு!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் தோன்றும் சாளரத்தில் Field Name , Datatype என்பவறறை வழங்கவும் (படம் -04).




### Field name (தரவுவெளிப்பெயர்)

இதில் நாம் விரும்பிய பெயர்களை வழங்க முடியும். உதாரணமாக username , password , account ,etc...

### Datatype (தரவுவகைகள்)

Access இல் காணப்படும் தரவுவகைகளை மாத்திரமே பயன்படுத்த முடியும். இங்கு பல தரவு வகைகள் காணப் படுகின்றன

உதாரணமாக


| தரவுவகைகள் | பயன்பாடு |
|---|---|
| Text | எழுத்து அல்லது வசனங்களை சேமிப்பதற்கு |
| Number | இலக்கங்களை சேமிப்பதற்கு |
| Date/Time | திகதி நேரம் என்பவற்றை சேமிக்க |
| Currency | நாணயங்களை சேமிப்பதற்கு |

இத்துடன் இன்னும் பல தரவு வகைகளும் காணப் படுகின்றன.

### இனி table ஒன்றை உருவாக்குவோம்

Field name களாக username, password, name, address , telephone no ,age என்பவற்றையும் இவற்றின் datatype ற்கு முறையே text, text ,text ,text ,text ,number எனவும் type செய்து userprofile என table ற்கு பெயரிட்டு save செய்யவும் .

Save செய்த பின்னர் நீங்கள் உருவாக்கிய Table படத்தில் உள்ளவாறு தோன்றும். அதை Double Clik செய்து தேவையான தரவுகளை நிரப்பிக் கொள்ளலாம். அடுத்த இதழில் நாம் உருவாக்கிய Table ற்கு java interface மூலம் தரவுகளை எவ்வாறு உட்செலுத்துவது என்பதை ஆராய்வோம். (படம் -05).




தகவல் தொழில்நுட்பத்தின் உயிர்ப்பான மாற்றங்களை உடனுக்குடன் அறிந்திட

கட்டாயம் வாசியுங்கள்

PCTIMES

Visit www.pctimes.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் அன்றாடம் கணினியை பாவிக்கும் போது ஏற்படுகின்ற பிரச்சினைகள், எழுகின்ற சந்தேகங்கள் போன்றவற்றிற்கு தெளிவான மற்றும் விளக்கமான பதில்கள் இப்பகுதியில் வழங்கப்படும். இங்குள்ள விடயங்கள் பலருக்குமுள்ள சந்தேகங்களை நிவர்த்திக்கும் என்பதில் ஐயமில்லை.

HELP DESK

# உங்கள் கேள்விகள் எங்கள் பதில்கள்

*பதிலளித்தவர்: த.தவரூபன்*

## எது நல்ல Anti-Virus மென்பொருள்?

**Q** எனது கணினியில் AVG FREE 6.5 ஐ பயன்படுத்தியுள்ளேன். ஒவ்வொரு நாளும் நான் இணையத்தை பாவிக்கின்றேன். ஒவ்வொரு தடவையும் நான் இணையத்தை பயன்படுத்தும்போது AVG இனை update செய்கிறேன். ஆனால் எனது நண்பர்கள் AVG- Anti Virus பயனற்றது, சில வகையான Virus களை கணினியில் இருந்து நீக்காது என்கின்றனர். அப்படியாயின் சிறந்த Anti Virus வகை எது? Spy நீக்கியாக செயற்படக் கூடியது எது?

*S.வினோதன், மட்டக்களப்பு.*

**A** மேற்படி AVG FREE-6.5 Anti Virus மென்பொருள் ஆனது மிகவும் பழையது. தற்போது AVG FREE-7.5 கிடைக்கிறது. ஒவ்வொரு நாளும் இணையத்தினைப் பயன்படுத்துவதாகச் சொல்கின்றீர்கள். எனவே Update செய்வதில் பிரச்சினை இருக்காது. நண்பர்கள் சொல்கிறார்கள் என்பதற்காக நீங்கள் AVG சிறந்ததல்ல என்ற முடிவுக்கு வரமுடியாது. உங்கள் கணினியில் Anti Virus மென்பொருள் நிறுவப்பட்டிருக்கையில் கணினி வைரஸ் தாக்கத்திற்கு உட்படுகின்றதா? வெளியில் இருந்து வரும் வைரஸ்களை அடையாளம் கண்டு நீக்குகின்றதா ? என்பதில் இருந்துதான் நீங்கள் இது பற்றிய முடிவுக்கு வரலாம்.

தற்போது முன்னணி Anti Virus மென்பொருள்களாக AVG,McAfee,Nortan/SymanTec,KasperKey போன்றவற்றினை பட்டியலிடலாம். எதுவாக இருந்தாலும் அதனுடைய சமீபத்திய பதிப்பை இட்டு அதனை நாளாந்தம் Update செய்யவேண்டும். பெரும்பாலும் இவை அனைத்தும் ஒன்றுக்கொன்று சளைத்தவைகள் அல்ல. அநேக வைரஸ்களை அடையாளம் கண்டு அழிக்கின்றன. எது சிறந்தது எனக் குறிப்பிட்டுச் சொல்ல முயல்வதற்கு மேலதிக ஆராய்ச்சி அவசியம்.


## Dual Core என்றால் என்ன?

**Q** எனது கணினி 1.8 GHz Dualcore Processor இனைக் கொண்டுள்ளது. இது Intel Pentium 3.0 GHz processor இன் வேகத்திற்கு சமன் என கூறுகின்றனர். இது உண்மையா? முழு விளக்கம் தரவும்.

மற்றும் இன்றைய நிலையில் வெளியாகும் Games இனை விளையாடுவதற்கு பொதுவாக தேவைப்படும் VGA Card இன் தகவு நிலை என்ன? Windows Vista வினை கணினியில் நிறுவுவதற்கு தேவைப்படும் வன் பொருட்களின் தகவு நிலை என்ன?

*A.ஸிரானி, திருகோணமலை.*

**A** உண்மையில் 1.8 GHz Dualcore Processor ஆனது சாதாரண 3.0 GHz புரோசசர்களின் செயற்பாட்டுக்கு ஒத்தது அல்ல. ஆனால், சாதாரண 1.8 GHz புரோசசரிலும் வேகம் கூடியது. இங்கு இரண்டு புரோசசர்கள் ஒரே இணைப்பில் (Socket) சமாந்தரமாகத் தொடுக்கப்பட்டுள்ளன. இவை தமக்கென தனித்தனி Cache நினைவகங்களைக் கொண்டிருக்கின்றன. இங்கே Cache நினைவகம் என்றால் என்ன என்ற தெளிவு நமக்கு வேண்டும்.



CPU இன் வேகமானது RAM இனது வேகத்தினை விட மிக மிக உயர்வானது. எனவே RAM இனது வேகம் ஆனது கணினியின் தொழிற்படு வேகத்தை குறைக்கப்போகிறது. இதற்காக இவர்களுக கிடையில் புரோசசரில் உள்ள Cache நினைவகம் தொழிற்படும். Cache நினைவகத்திற்கு RAM இல் இருந்து தரவுகள் மாற்றப்பட்டு பின் CPU இன் வேகத்துக்கு ஈடுகொடுத்து Cache இல் இருந்து CPU இற்கு வழங்கப்படும்


எனவே cache நினைவகம் கூடிய புரோசசர்கள் கணினியின் வேகத்ததுக்கு வழி கோலும். இருந்தபோதிலும் ஒன்றுக்கு மேற்பட்ட தொழிற்பாடுகளை மேற்கொள்ளும்போது இந்த cache கூட ஒரு கணம் திணறத்தான் செய்யும். இவ்வேளை நாம் பலவிடயங்களுக்கு கியூவில் நிற்பது போல தரவுகளும் Cache நினைவகத்தில் கியூவில் நிற்கவேண்டிய நிலை ஏற்படும். இதனால் நேரம் தாமதமாகும்

இந்த நிலை Dualcore Processor ரில் தவிர்க்கப்படும். இதற்காக புரோசசரின் வேகம் இருமடங்கானது என்ற முடிவுக்கு வரமுடியாது. தனி புரோசசரினை விட Dualcore Processor வேகம் அதிகம் என்று கூறலாம். மேலும் இன்னுமொரு விடயம் கவனிக்கவேண்டியுள்ளது. Dualcore Processor ரின் முழுமையான பயனைப் பெறவேண்டுமாயின் Operating System உள்ளிட்ட கணினியில் உள்ள மென்பொருட்கள் சமாந்தர பன்முக ஊடுபுகல் தொழில்நுட்பத்திற்கு (Simultaneous Multi-threading Technology (SMT) ஒத்திசைவானதாக இருக்கவேண்டும். Adobe Photoshop, AutoCAD இதற்கு ஒத்திசைவான மென்பொருள்களாகும். Operating System களில் Windows XP Home Edition இற்கு பின் வந்தவையே ஒத்திசைவானவையாகும். ஒத்திசையாத மென்பொருட்களின் பாவனையின்போது ஒரு புரோசசரே பாவனைக்குட்படுத்தப்படும்.

மேலும் Core 2 Duo மற்றும் Dual Core என இரண்டு பெயர்கள் சந்தையில் பேசப்படுகின்றன. அவை இரண்டுமே ஒன்றுதான். Dual தொழில்நுட்பத்தில் தனது தயாரிப்புக்கு இன்ரெல் நிறுவனம் உபயோகப்படுத்துவதுதான் முதல் பெயர். முடிவாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இறுதியாகவும் கூறக்கூடியது Dual Core ஆனது இரட்டை வேகம் உடையதல்ல.

இன்றைய நிலையில் வெளியாகும் Games இனை விளையாடுவதற்கு பொதுவாக தேவைப்படும் VGA Card இன் அதி குறைந்த தகவு நிலை 128MB என கூறலாம். மேலும் Vista இயங்குதளத்துக்கு குறைந்தது 512 RAM உம் 256 MB VGA உம் 15GB Hard Disk இடவசதியும் அவசியம்.

## இலவச Mobile Phone மென்பொருள்கள்

**Q** நான் மொபைல் போன் திருத்தும் பயிற்சியில் ஈடுபட்டுள்ளேன். எனக்கு ஒவ்வொரு வகையான Phone களுக்குரிய மென்பொருட்களை/Operating System களை இன்ரநெட்டில் இருந்து பதிவிறக்கம் செய்வதென்றால் அதை எந்த Address ல் பெறமுடியும்? இலவசமாக பதிவிறக்கம் செய்ய முடியுமா? அல்லது குறிப்பிட்ட பணத்தொகையைக் கட்டி பதிவு செய்வதன் மூலம் அவற்றை பெறமுடியுமா என்பதை சரியான வழிமுறைகளுடன் விளக்கவும்.

*L.C.மோகன், வவுனியா.*

**A** தகவல் கிடங்கான இணையத்தில் குறித்த ஒரு விடயத்திற்கென குறிப்பிட்டு ஒரு முகவரியை சொல்ல இயலாது. கூகிள் போன்ற தேடுபொறிகளின் வாயிலாக தேடினால் வியக்கவைக்கும் அளவுக்கு முடிவுகள் கிட்டும். இருந்தபொழுதிலும் எனது தேடலில் கிடைத்த தளங்கள் இவை. இங்கே உங்களுக்கு கை நிறைய பலன் கிட்டலாம்.

www.mobileheart.com/
www.cellular.co.za/

## Video Editing மற்றும் Remix செய்வது எப்படி?

**Q** ஒரு இசைப்பாடலில் உள்ள இசையை அல்லது காட்சியை வேறு ஒரு பாடலின் இசையுடன் எவ்வாறு MIX செய்வது? அதாவது REMIX வடிவில் பெற்றுக்கொள்வது? இவ்வாறு செய்வதற்கான SOFTWARE ஏதும் உண்டா? அதனை எவ்வாறு எங்கு பெற்றுக்கொள்ள முடியும் போன்ற விடயங்களை தெளிவான முறையில் தரவும். Video Cam coder ஒன்றில் record செய்த Video Clip ஒன்றை எவ்வாறு கணினிக்கு இணைப்பது? அப்படி இணைப்பதற்கு Cord வகைகள் ஏதும் உண்டா? போன்ற விடயங்களையும் தரவும்.

*T.திலக்ஷன், மாத்தளை.*

**A** Vedio Editing மென்பொருள்களின் உதவியால் வீடியோ பாடலொன்றின் ஒலிப்பகுதியை Time Line பகுதியில் வைத்து நீக்கிவிட்டு குறித்த நேரப்பகுதிக்காக இன்னொரு Audio கோப்பினை வைத்து மீள வீடியோ பாடலை உருவாக்க முடியும். இதற்கு கூடிய அனுபவம் தேவையில்லை குறித்த மென்பொருளில் TimeLine பகுதியை சரியாக கையாண்டால் போதும். நீங்கள் நகைச்சுவையுடன் கூடிய வீடியோ பாடல்களை உருவாக்க முடியும். Adobe Premier, Pinacle Studio, Cool 3D, Ulead Video Studio போன்றவற்றை Video Editing மென்பொருள்களை உதாரணமாகக் கூறலாம். Audio பாடல்களில் மெருகூட்டம் செய்வதற்கு நிறைய மென்பொருட்கள் உள்ளன. http://www.dailymp3software.com/mixer.html என்ற முகவரியில் இவற்றில் பலவற்றை பெறலாம்.

Video Cam Coder களில் டிஜிரல் மற்றும் அனலொக் என இரு வகை இருக்கின்றன. டிஜிரல் எனில் வெறுமனே USB Cable ஊடாக கணினிக்கு உள்வாங்கலாம். அனலொக் எனில் Capture Card களின் ஊடாக கணினிக்குள் கொண்டுவரலாம். தற்போது வெளிவரும் Video Cam Coder களில் இருந்து USB Cable ஊடாக மென்பொருள்களின் உதவியுடன் சுலபமாக கணினிக்கு உள்வாங்க முடிகிறது. இங்கு இதற்கான ஏற்பாடுகள் குறித்த சாதனத்திலேயே காணப்படுகிறது. எனவே Capture Card தேவைப்படாது.

பல்வேறு விலைகளில் பல்வேறு நிறுவனங்களின் Capture Card கள் சந்தையில் கிடைக்கின்றன. இங்கு ஒன்றை தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும் கணினியில் தரவுகள் டிஜிரல் முறையில் சேமிக்கப்படுகின்றன. அத்துடன் TV Card ஆனது தொலைக்காட்சியாக கணினியை பயன்படுத்துவதற்கும் Capture Card ஆனது Cassette மற்றும் சில அனலொக் Cam Coder களில் இருந்து கணினிக்கு கோப்பு மாற்றம் செய்வதற்குமாகும்

Capture செய்வதற்கு குறிப்பிட்ட சாதனங்களுடன் சிறப்பு மென்பொருள்கள் சீடிகளில் வழங்கப்படுகின்றன. அவை அவ்வச் சாதனங்களுக்கு பயன்பாட்டுக்கு இலகுவானதாகும். PCT

HELP DESK

Help Desk பகுதிக்கு கேள்விகளை அனுப்பும் வாசகர்கள் தங்களது கேள்விகளை போதுமான விபரங்களுடன் எழுதியனுப்பவும். பிரசுரத்திற்கு ஏற்ற வகையில் சுருக்கி எழுதி அனுப்ப வேண்டாம். கேள்விகளை ஆசிரியர் சுருக்கி பிரசுரிப்பார்.

கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி :

Help Desk,
Tamil PC TIMES Magazine,
Wijeya Newspapers Ltd.,
No.08, Hunupitiya Cross Road,
Colombo - 02.

*Visit* www.pctimes.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OEM Logo ஐ நீங்களும் மாற்றியமைக்கலாமே!

*அனூப்*

Desktop இலுள்ள My Computer icon மீது Right Click செய்ய வரும் Context menu வில் Properties என்ற தெரிவை கிளிக் செய்யும்போது வரும் System Properties எனும் தலைப்பிலமைந்த Dialog box இல் General Tab இன் கீழ் நீங்கள் நிறுவியுள்ள விண்டோஸின் பதிப்பு, பதிவு விவரம், Processor வகை மற்றும் அதன் வேகம், நினைவகத்தின் கொள்ளளவு போன்ற தகவல்களைக் காணலாம் (படம் -01).


இவற்றில், கணினி தயாரிப்பு நிறுவனம், கணினியின் மாதிரி இலக்கம், அதனுடன் இணைந்த சிறிய படம் (இலட்சினை), மற்றும் அதன் கீழ் காணப்படும் Support Information எனும் Button ஐக் க்ளிக் செய்ய வரும் Dialog box இல் தோன்றும் விவரங்கள் போன்றவை OEM தகவல்கள் எனப்படும்.

OEM என்பது Original Equipments Manufacturer என்பதன் சுருக்கமாகும். ஏதேனுமொரு பொருளை உற்பத்தி செய்யும் (வன்பொருள் / மென்பொருள்) முதன்மை நிறுவனம் அப்பொருளை நேரடியாக வாடிக்கையாளரிடம் கொண்டு செல்லாமல் வேறொரு நிறுவனத்திடம் ஒப்படைத்து விடும். இரண்டாவது நிறுவனம் அப்பொருளை மேலும் மேம்படுத்தி தனது பெயரில் பொதி செய்து வாடிக்கையாளர்களை அடையச் செய்யும். எனினும் நேர்மாற்றமாக OEM என்பது இரண்டாவது நிறுவனத்தையே குறித்து நிற்கிறது.

இவ் OEM தகவல்கள் அனைத்தும் .ini என்ற File வடிவமைப்பில் கணினியில் சேமிக்கப்படுகின்றன. இதனை Notepad போன்ற Text Editor கொண்டு மாற்றியமைக்கலாம்.

இந்த File ஆனது, [General], [Support Information] எனும் இரு பகுதிகளைக் கொண்டிருக்கும்.

இந்த இரு பகுதிகளிலும் இருக்க வேண்டிய தரவுகளை அமைத்தவுடன் அதனை oeminfo எனும் பெயரில் .ini எனும் File வடிவில் சேமித்து Windows Folder இல் உள்ள System32 (Windows me, XP) எனும் Sub Folder க்குள் சேமிக்க வேண்டும். Windows 98, மற்றும் 2000 பதிப்பாயின் System எனும் போல்டருக்குள் சேமிக்க வேண்டும்.




அதனுடன் உங்கள் நிறுவன இலட்சினை (Logo) தோன்றச்செய்ய வேண்டுமாயின் ஏதேனுமொரு Photo Editing மென்பொருள் கொண்டு நீங்கள் போட விரும்பும் படத்தின் அளவு 120 x 120 Pixel இல் இருக்கத்தக்கதாக உருவாக்கிக் கொள்ள வேண்டும். பின்னர் அதனை oemlogo எனும் பெயரில் .bmp (bitmap) Format இல் சேமித்து அதனைக் Cut செய்து மேற்சொன்ன அதே System32 Folder க்குள் Paste செய்து சேர்க்க வேண்டும். இப்போது Key board இல் Win Key உடன் சேர்த்து Break Key ஐ அழுத்த System Properties Dialog box இல் உங்கள் கை வரிசையைக் காணலாம்.

Notpad ஐத் திறந்து கீழுள்ளதை மாதிரியாகக் கொண்டு Type செய்து oeminfo.ini எனும் பெயரில் C:\windows\system32 எனுமிடத்தில் சேமிக்கவும்.

[General]
Manufacturer=PC TIMES
Model=Desktop

[Support Information]
Line1=Visit our website
Line2=
Line3=http://www.pctimes.lk
Line4=
Line5=Contact Us
Line6=011 2479656
Line7=pctimes@wijeya.lk

(= என்ற அடையாளத்திற்கு வலப் பக்கம் உள்ள விபரங்களை நீங்கள் விரும்பியது போன்று மாற்றிக் கொள்ளலாம்.)

மேற்சொன்ன செயன்முறை கடினமென நினைப்பவர்கள் www.max2k.com எனும் இணையதளத்திலிருந்து OEMLOGO எனும் 272 Kb அளவுள்ள சிறிய இலவச Utility ஐ பதிவிறக்கம் செய்து அதன் மூலமும் Logo மற்றும் அது சார்ந்த தகவல்களை விருப்பம் போல் இலகுவாக மாற்றியமைக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாயமா? மந்திரமா?

# Harry Potter

## இது வித்தைகளின் தொகுப்பு

*செல்லப்பிள்ளை*

கடந்த ஜுலை மாதம் 21 ஆம் திகதி உலக மக்களுக்கு குறிப்பாக சிறுவர்களுக்கு மகிழ்ச்சி பொங்கும் நாளாக அமைந்ததை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அன்றுதான் J.K. Rowling என்ற எழுத்தாளர் எழுதும் Harry Potter புனைக்கதைத் தொடரின் இறுதி நூலான Harry Potter and the Deathly Hallows என்பது வெளியானது. Harry Potter இப்படி உலகளவில் பிரசித்தம் அடைந்து போனதற்கு அது கொண்டுள்ள மாய வித்தைகள் காரணமா? எது எப்படியிருப்பினும் அந்நூல் வாசகர்களை கட்டிப்போடும் தகவு கொண்டுள்ளது மட்டும் வெளிப்படையானது தான்.

இந்த நூல்களின் கதைகளை அடிப்படையாகக் கொண்டு திரைப் படங்களும், கணினி விளையாட்டுகளும் வெளியாகி, அவையும் உலக மக்களின் பிரசித்தத்தை அதிகளவில் வென்று கொண்டேயிருக்கின்றன.

And the Goblet of Fire என்ற தொடரினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள கணினி விளையாட்டானது, வித்தைகளை மெய் நிகராவே தொகுத்தளிக்கும் உன்னத அனுபவமாகும். Harry, Ron, மற்றும் Hermione ஆகிய பாத்திரங்கள் திரைப்படத்தில் வடிக்கப்பட்டுள்ளதைப் போன்றே இக்கணினி விளையாட்டிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. கணினி விளையாட்டில் ஈடுபடுபவர் வித்தைகளை மாயங்களை செய்து அவற்றை நிஜமாகவே அனுபவிக்கும் வாய்ப்பை இக்கணினி விளையாட்டின் மூலம் பெற்றுக் கொள்ள முடியும். திரைப்படத்தில் உள்ள அனைத்து கதாபாத்திரங்களும் செய்யும் வித்தைகளையும் செய்யக்கூடிய விதத்தில் இக்கணினி விளையாட்டு உருவாக்கப்பட்டுள்ளது இதன் முக்கிய சிறப்பம்சமாகும். இதனால், குறித்த திரைப்படத்தை எமக்கு விரும்பிய கோணத்தில் கதாபாத்திரங்களை வைத்து இயக்கக்கூடிய நிலையை இந்த கணினி விளையாட்டை விளையாடுவதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

நிச்சயமாக இக்கணினி விளையாட்டு பிரமிப்பை விளையாட்டில் ஈடுபடுபவருக்கு வழங்கும் என்பதில் இருவேறு கருத்திருக்க வாய்ப்பில்லை. நீங்களும் மாயங்களை செய்யும் அனுபவத்தை இக் கணினி விளையாட்டினை விளையாடுவதன் மூலம் பெறலாமே!

### Minimum System Requirements




Pentium 4 1.4GHz or Athlon 1400+ processor
256MB RAM
8x CD-ROM drive
1.1GB of uncompressed free hard disk space
32MB graphics card
16-bit sound card



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளி விழாக்காணும் CD

*தாரிக் அஸீஸ்*

இன்றளவில் அதிக மென் பொருள்கள், இசைக்கோப்புகள் ஏன் திரைப்படங்கள் கூட டிஜிடல் வகையில் இணையமூடாகவே பதிவிறக்கம் (Download) செய்யப்படுகின்றன. இருந்தபோதிலும், இதுவரையில் 200 பில்லியனுக்கும் அதிகமான CDகள் உலகளவில் விற்பனை செய்யப்பட்டுள்ளதானது, CDகளின் வேகமான வியாபிப்பையும், பிரபல்யத்தையும் சுட்டி நிற்கின்றது.

Philips மற்றும் Sony ஆகிய இரு நிறுவனங்களினதும் கூட்டு முயற்சியால் உருவாக்கப்பட்ட CD ஆனது, கணினிப் பயனர்களின் தரவு சேமிப்புச் சாதனங்களில் முதன்மையானதாக கருதப்பட்டது.

"Philips நிறுவனமானது Sony நிறுவனத்துடன் இணைந்து CD ஐ உருவாக்கியதன் மூலம், உலகளவில் CD க்கான பிரபல்யத்தை ஓங்கச்செய்ய வேண்டுமென்பதே எமது பிரதான நோக்கமாகவிருந்தது" என 25 வருடங்களுக்கு முன்னர் CD ஐ உருவாக்கிய Philips இன் குழுவில் இடம்பெற்ற அங்கத்தவர் Piet Kramer தெரிவிக்கின்றார்.

**இற்றைக்கு சரியாக 25 வருடங்களுக்கு முன், ஜெர்மனியிலுள்ள Philips தொழிற்சாலையில் இசையில் புரட்சியை ஏற்படுத்தியவாறு CD உருவாக்கம் பெற்றது.**

ஆனாலும், இசைத்துறையிலும், கணினித் துறையிலும் உள்ளடக்கங்களைச் சேமித்து வைக்கும் பிரதான ஊடகமாக CD ஆனது உருவெடுக்கும் என தமது கம்பனி அப்போது எண்ணியிருக்கவில்லையென அவர் மேலும் தெரிவிக்கின்றார்.

1979 இல் இந்த இரு நிறுவனங்களும் ஒரு மணித்தியால நீளத்தைக் கொண்ட ஒலிக்கோப்பை உள்ளடக்கும் வகையில் தட்டொன்றை உருவாக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டன. இருந்தபோதிலும், நியம இசைக் கோப்பொன்றை சேமிக்க இதன் விளைவாக 74 நிமிட நீள முடைய ஒலிக்கோப்புகளை சேமித்து வைக்கும் தகவுடைய தட்டுக்கள் உருவாக்கப்பட்டன.

பாரம்பரிய இசைத் தொகுப்புக்களை உள்ளடக்கிய வகையில் முதலாவது CD ஆனது 1982 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் விற்பனைக்காக விடப்பட்டது.

ஆரம்பகாலத்தில் CDகளும், CD Playerகளும் மிகவும் அதிக விலையிலேயே விற்பனை செய்யப்பட்டுள்ளன. Philips நிறுவனத்தின் முதலாவது CD Player ஆனது, இன்றைய மதிப்பில் 1000 ஸ்டேலிங் பவுனுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது ஆச்சரியமானதே! இது இன்றைய நிலையில் எமது நாட்டின் பணத்தின் படி, ஏறத்தாழ, 230,000 இற்கும் அதிகமான தொகையாகும்.

இவ்வாறாக உருவாக்கம் பெற்ற CD யின் உருவாக்கப் பணி வரலாறு மிகவும் சுவாரஸ்யமான பல மைல் கற்களைக் கொண்டதாகும். அவற்றையும் நாம் இப்போது அறிந்து கொள்வோமா?

1978 ஆம் ஆண்டு Philips நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட Video Disc தொழில்நுட்பமானது தோல்வி அடைந்ததன் விளைவால், Compact Disc எனப்படும் CD களை உருவாக்கும் செயற்றிட்டம் தொடங்கப்பட்டது. ஒரு தட்டிலிருந்து பௌதீக தொடர்பு இல்லாமலேயே, அதிலுள்ள தரவுகளை லேசர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி




1979 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9 ஆம் திகதி பிலிப்ஸ் நிறுவனத்தின் CD Audio பிரிவின் தலைவர் Joop Sinjou முதன் முதலாக உலகிற்கு CD ஐ அறிமுகம் செய்து வைக்கிறார். 1982 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி முதலாவது CD ஜெர்மனியில் உள்ள பிலிப்ஸ் தொழிற்சாலையில் உருவாக்கப்பட்டது.

PHILIPS / JOOP SINJOU



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசித்த முதலாவது வணிகத் தயாரிப்பாக Video Disc கள் இனங்காணப்படுகின்றன.

1957 ஆம் ஆண்டு இத்தாலி நாட்டைச் சேர்ந்த Antonio Rubbiani இன் அடிப்படையான Video Disc முறைமையிலிருந்து பல விடயங்கள் எடுக்கப்பட்டு சுமார் 12 ஆண்டுகளுக்குப் பிற்பாடு, Video Disc இற்கான ஆராய்ச்சி தொடங்கப்பட்டது.

ஆரம்பகால Gramophone களில் உபயோகப்படுத்தப்பட்ட தட்டுகளைப் (Vinyl Records) போன்று தட்டொன்றை உருவாக்கும் பணிகள் Philips நிறுவனத்தால் தொடங்கப்பட்டது. இதன் பெயரோ ALP (Audio Long Play) என வழங்கப்பட்டது. ஆனாலும், இவை Vinyl Records ஐப் போலல்லாது லேசர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இயங்க வேண்டுமென்ற ஆர்வம் நிறுவனத்தின் ஆராய்ச்சியில் உயிர்ப்பாக இருந்ததெனலாம்.

ஒரு மணித்தியால ஒலிக்கோப்புகளை உள்ளடக்கிய நிலையில் Vinyl Record ஐ விட அளவில் சிறியதாக உத்தேசிக்கப்பட்ட ALP அமைய வேண்டுமென, Philips நிறுவனத்தின் ஒலியமைப்புப் பிரிவின் தொழில்நுட்பப் பணிப்பாளர் Lou ottens முதன் முதலில் பிரேரித்தார்.

Philips நிறுவனமானது, 1977 இல், புதிய ஒலி வடிவமைப்பை (Audio Format) உருவாக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டது. இந்த உற்பத்திக்கு பெயரிட Mini Rack, Mini Dic மற்றும் Compact Rack போன்ற பல பெயர்கள் கலந்தாலோசிக்கப்பட்டாலும், இறுதியில் Compact Cassette உடன் மக்கள் காட்டிய ஆர்வத்தின் அடிப்படையை உணர்ந்து கொண்ட குழு,

> Philips நிறுவனமானது, தமது உற்பத்திக்கு பெயரிட Mini Rack, Mini Dic மற்றும் Compact Rack போன்ற பல பெயர்களை கலந்தாலோசித்தாலும், இறுதியில் Compact Cassette உடன் மக்கள் காட்டிய ஆர்வத்தை உணர்ந்த நிறுவனம் புதிய தயாரிப்பிற்கு Compact Disc என பெயரிடுவது என முடிவு செய்தது.

புதிய தயாரிப்பிற்கு Compact Disc என பெயரிடுவது என முடிவு செய்தது.

1979 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஊடகவியலாளர் மாநாடு ஒன்றை நடாத்தி CD இன் ஒலிக்கோப்புகளின் துல்லியம், வேகம் என்பன பற்றி விளக்கங்களை Philips நிறுவனம் உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டியது. இது நடந்து ஒரு கிழமையின் பிற்பாடு ஜப்பானுக்கு விஜயமொன்றை மேற்கொண்ட Philips நிறுவனம், ஜப்பானின் Sony நிறுவனத்துடன் CD இன் மேலதிக அபிவிருத்தி தொடர்பில் சேர்ந்தியங்க ஒப்பந்தமானது.


Sony நிறுவனத்தால், CD இன் நியமங்கள் தொடர்பான விரிவான விளக்கம் அடங்கிய ஆவணம் 1980 இல் வெளியீடு செய்யப்பட்டது. 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், பாரம்பரிய Record Player களை புறந்தள்ளிய வகையில் தாம் தயாரித்த CD Player ஐ Philips நிறுவனம் உலகுக்கு முதன் முதலாக அறிமுகம் செய்து வைத்தது ஆச்சரியமான விடயமாக அனைவராலும் பார்க்கப்பட்டது.

இவ்வாறு உருவாகிய CD ஆனது, இன்றளவில் இசை, திரைப்படம், தரவு என அனைத்தையும் சேமித்து வைக்கப் பயன்படும் பிரதான ஊடகமாகக் கணிக்கப்படுகின்றது.


இணையத்தின் மூலமாக தரவுகளை தரவிறக்கம் செய்து கொள்வதனால் CD களின் விற்பனையில் வீழ்ச்சியுண்டாகியுள்ளதாகச் சொல்லப்படுவது உண்மையாக இருந்தபோதும், இவ்வாறு தரவிறக்கம் செய்யப்படும் விடயங்களை சேமித்து வைக்கப் பொருத்தமான சேமிப்புச் சாதனமாக CD களே விளங்குகின்றது.

இன்றைய நிலையில் Mini CD, CR-R, CD-RW போன்ற வகைகளில் CD கள் விற்பனைக்காக காணப்படுகின்றன. இவை ஒவ்வொரு தேவையின் நிமித்தம் பல்வேறு வகையில் பயன்படுத்தப்படுகின்றன.

டிஜிடல் புரட்சியை உண்டு பண்ணிய நிலைகளில் CD ஐயும் ஒரு முக்கிய சாதனமாகக் கருத முடியும். ஆனாலும், CD களைத் தாண்டி செயற்றிறன் உடைய, கொள்ளளவில் மிகப் பெரிய DVD மற்றும் Blu-ray disc என்பன இப்போது பிரபல்யமாகி வருவதுவும் தொழில்நுட்ப விடயங்களில் மாற்றம், முன்னேற்றம் என்பன விட்டுப்பிரியாத பண்புகள் என்பதை சுட்டி நிற்கும் விடயங்களே!



1982 ஆம் ஆண்டு விற்பனைக்காக விடப்பட்ட முதலாவது CD ஐயே படத்தில் காண்கிறீர்கள். இதன் விட்டம் 12 Cm ஆகும்.




CD களின் வருகையை தொடர்ந்து CD Player களின் உற்பத்தியும் தீவிரமானது. உலகின் முதலாவது CD Player ஐயே படத்தில் காண்கிறீர்கள்.

PHOTOS / PHILIPS COMPANY ARCHIVE



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கணினிப் பாவனையில் அன்றாடம் பயன்படுத்தக்கூடிய உபயோகமான மற்றும் சுவாரசியமான Tips மற்றும் Tricks ஆகியவற்றை இந்த Hack Insight எனும் பகுதியினூடாக தரவிருக்கின்றேன். நீங்கள் உங்கள் கணினியோடு இந்த Hack களைப் பயன்படுத்தி புதிய அனுபவங்களையே பெற்றுவிடலாம்.

ZEEZAT

# HACK INSIGHT

## Windows Explorer இல்

Thumbnail, Icon, Tiles போன்ற பார்வை இடைமுகங்களை நீங்கள் பயன் படுத்தியிருப்பீர்கள். Folder ஒன்றுக்குள் நிழற்படங்கள் பலவுள்ளன என வைத்துக் கொள்வோம். நீங்கள், அந்நிழற்படங்களை Thumbnail நிலையில் காணவேண்டும். ஆனால், நிழற்படங்களின் File name கள் திரையில் தோன்றக்கூடாது என நினைக்கிறீர்கள். இதனை எவ்வாறு செய்வீர்கள? இதனை மிக இலகுவாகச் செய்யலாம். நீங்கள் Shift Key அழுத்திய வண்ணம் பார்வை இடைமுகத்தை Thumbnail ஆக மாற்ற கோப்புகளின் பெயர்கள் இல்லாமல் Thumbnail களாக மட்டும் கோப்புகள் காட்சியாகும். கோப்புகளின் பெயர்களைத் திரையில் தோன்றவைக்க மீண்டும் அவ்வாறு செய்தால் போதும். முயன்றுதான் பாருங்களேன்!.







## உங்கள் கணினியில்

கோப்புக்களை ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு Move செய்ய அல்லது Copy செய்ய அல்லது Short cut ஐ உருவாக்க என பல விடயங்களை கோப்புகளை Right Click செய்து தோன்றும் Menu ஐப் பயன்படுத்தி நீங்கள் செய்திருக்கக்கூடும். ஆனால் இவற்றை மிக இலகுவாகச் செய்வது பற்றி நீங்கள் அறிவீர்களா?

Ctrl Key ஐ அழுத்திய வண்ணம் குறித்த File ஐ drag செய்ய File Copy ஆகிவிடும், Shift Key ஐ அழுத்திய வண்ணம் File ஐ drag செய்ய அது Move ஆகிவிடும். அதுமட்டுமா, குறித்த File ஐ Alt key ஐ அழுத்திய வண்ணம், drag செய்தால், File இற்கான Shortcut உடனே உருவாக்கப்பட்டுவிடும். ரொம்பவும் இலகுவானது. செய்து பாருங்கள்!.


## உங்களால் முடியுமா?

Windows XP நிறுவப்பட்டுள்ள கணினியின் desktop இல் con எனும் பெயரில் Folder ஒன்றை உருவாக்க உங்களால் முடியுமா? முடிந்தால் எங்களுக்குச் சொல்லியனுப்புங்கள். அடுத்த இதழில் இதுபற்றி நாம் விரிவாகக் கதைப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உங்கள் கணினியானது எந்தச் சலனமும்* இல்லாமல் இயக்கமேயின்றி இருந்தால், நீங்கள் Ctrl+Alt+delete ஆகிய Keyகளை ஒரே தடவையில் அழுத்தி உயிர்ப்படையச் செய்ய முயற்சி செய்திருப்பீர்கள். உண்மையில் Task Manager ஐ திரையில் கொண்டு வரவே இந்த நடவடிக்கையை நீங்கள் எடுக்கின்றீர்கள் என்பதை நீங்கள் அறிவீர்களா?




இந்த Task Manager ஐ நீங்கள் பெற்றவுடன் அதில் Not Responding எனும் நிலையிலுள்ள Program களை Select செய்து, End Task செய்வதன் மூலம், உங்கள் கணினி பழைய நிலைக்குத் திரும்பி, வேலை செய்யத் தொடங்குவதைச் சாத்தியமாக்கலாம். Task Manager ஐ இலகுவாகப் பெற்றுக் கொள்ளும் இன்னொரு வழியை உங்களுக்குச் சொல்லித் தரவா?

Ctrl, Shift மற்றும் Escape ஆகிய Key களை ஒரே தடவையில் நீங்கள் அழுத்தினால், Windows Task Manager உங்கள் திரையில் தோன்றும். ரொம்ப இலேசு!

# உங்கள் விழிக்கோணங்கள்



நீங்கள் உங்கள் சூழலைக் காணும் விதத்தை உங்கள் விழிக் கோணங்களால் கிரகித்து கமராவினால் படம் பிடித்து எமக்கு அனுப்பி வைக்கலாம். புதுமையான, வித்தியாசமான உங்கள் திறன்களைக் கண்டு அவற்றுக்கு பரிசு வழங்க காத்திருக்கிறோம். தரமான நிழற்படங்கள் சஞ்சிகையிலும் இணையத்தளத்திலும் பிரசுரிக்கப்படும். உங்கள் கோணங்களையும் ஆவணப்படுத்தி எங்களுக்கு அனுப்பி விடுங்கள்.

நிழற்படங்களை மின்னஞ்சல் ஊடாக அனுப்புகையில் கவனிக்கவேண்டியவை

- அனுப்பும் படங்கள் JPEG Format இல் இருத்தல் வேண்டும்.
- நிழற்படத்தின் பிரிதிறன் 800 x 600 Pixels ஆக இருக்க வேண்டும்.
- நிழற்படத்தின் கொள்ளளவு 1 MB யை தாண்டக் கூடாது.
- ஒருவர் ஒரு மின்னஞ்சலில் ஒரு நிழற்படத்தை மாத்திரமே அனுப்ப வேண்டும்.
- அனுப்பும் நிழற்படங்கள் பற்றிய சிறுகுறிப்பு ஒன்றையும் அனுப்புபவர் மின்னஞ்சலில் எழுதி அனுப்பவேண்டும். இதில் குறித்த நிழற்படம் எந்த இடத்தில் பிடிக்கப்பட்டது என்ற தகவலும் அடங்கியிருத்தல் வேண்டும்.
- நிழற்படங்களை அனுப்புகையில் மின்னஞ்சலில் Subject ஆக Photo Contest என குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.


*அனுப்ப வேண்டிய முகவரி*

*pctimes@wijeya.lk*




*உங்கள் கணினியிலுள்ள* Folder ஒன்றை Tool bar ஆக மாற்றுவது பற்றி அறிந்திருக்கிறீர்களா? இதோ அதற்கான இலகுவழி. முதலில் நீங்கள் Toolbar ஆக மாற்றவேண்டிய Folder ஐ Select செய்து, அதனை desktop இன் விளிம்பு வரை drag செய்தால், Folder ஆனது, Toolbar ஆக மாறிவிடும். இவ்வாறு மாறிய Toolbar ஐ desktop இன் மத்திய பகுதிக்கு drag செய்தால், அது Floating toolbar ஆக மாற்றப்பட்டு காட்சியளிக்கும். Toolbar அவசியமில்லையென்றால் Close button ஐ Click செய்து அதனை இல்லாமலாக்கலாம். தேவையான File களை வேகமாக Open செய்து கொள்வதற்கு மிகவும் பொருத்தமான Trick ஆக இதனைக் கருத முடியும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*S.K.A.Hanees*

# Screen ஐ Capture செய்துகொள்ள இலகுவழி

**கணினித் திரையை படம் பிடித்து அதில் எமக்குத் தேவையான விதங்களில் மாற்றங்களைச் செய்து கொள்ளும் வகையில் துணைபுரியும் இலவச மென்பொருள்**



**Gadwin Print Screen**

பொதுவாக நாம் Screen ஐ Capture செய்வதற்கு Keyboard இல் உள்ள Print Screen எனும் Key இனைப் பயன்படுத்துவோம். இவ்வாறு Capture செய்யும்போது முழு Screen உம் Capture செய்யப்படும். பின்பு நாம் அதனை Paint brush அல்லது ஏதாவது ஒரு Graphic Editing மென்பொருளில் Paste செய்து நமது தேவைக்கு ஏற்ப Edit செய்துகொள்வோம். இந்த செயல் முறையானது நேரத்தை விரயமாக்கு வதுடன் சிரமத்தினையும் ஏற்படுத்துகிறது.

எனவே, இலகுவாகவும் விரைவாக வும் screen இல் நமக்குத் தேவையான பகுதியினை மாத்திரம் Capture செய்து கொள்வதற்கு Gadwin PrintScreen எனும் மென்பொருள் நமக்கு துணைபுரிகிறது.

இப்பொழுது இந்த Gadwin Print Screen மென்பொருளைப் பற்றி சற்று ஆராய்வோம். இங்கு Capture செய்வதற்கு Print Screen எனும் Key இனை அழுத்த வேண்டியிருக்கும். அல்லது நமக்குத் தேவையான ஒரு Key இனை விருப்பம்போல் தெரிவு செய்துகொள்வதற்கான தெரிவுகளும் உண்டு.


Captured Area என்ற Option இல் உள்ள Rectangular Area எனும் Radio Button ஐ தெரிவு செய்து Capture செய்யும் போது, Screen இல் நமக்கு வேண்டிய பகுதியினை மாத்திரம் தெரிவு செய்து Print Screen எனும் key ஐ அழுத்தியதும் அது அப்பகுதியை மாத்திரம் Capture செய்து ஏற்கனவே நாம் தெரிவு செய்த Folder இனுள் Save செய்யும்.

இங்கே காணப்படும் மற்றொரு Option ஆகிய Current Window எனும் option ஐப் பயன்படுத்தி, நாம் ஒரு window இனை, உதாரணத்திற்கு "properties" window இனை capture செய்துகொள்ள வேண்டுமானால் அதை தெரிவு செய்து Capture செய்யும் போது அந்த Window மாத்திரம் Capture செய்யப்படும். இதேபோல் "menu" க்களையும் மிக இலகுவாக Capture செய்துகொள்ளலாம்.

Automatic Naming என்ற Option இன் மூலம் நாம் Capture செய்யும் File களுக்கு Auto ஆக பெயர்களை இட்டுக்கொள்ளலாம்.

capture செய்யப்பட்ட பகுதியினை jpg, gif, bmp, png வகை போன்ற file type களில் Save செய்யக் கூடியதாக உள்ளமை இம் மென்பொருளின் சிறப்பம்சங்களில் இன்னுமொன்றாகும். மேலும் அந்த Image File களுக்கு Auto ஆக Shadow க்களை இட முடிவதுடன், அவற்றை Resize செய்துகொள்ளவும் முடியும்.

இன்னும் பல சிறப்பம்சங்களைக் கொண்ட இந்த Gadwin PrintScreen மென்பொருளை இலவசமாக download செய்துகொள்ளவதற்கான இணைய முகவரி http://www.gadwin.com/download/ps_setup.exe ஆகும். நீங்களும் பதிவிறக்கி கணினியில் நிறுவி திரையை படமாக்கி பயன்பெறலாமே.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GSM: வயது இருபது



டாக்கா நகரில் மாணவர்கள் கையடக்கத் தொலைபேசியுடன் காணப்படுகின்றனர்.

ZEEZAT

கையடக்கத்தொலைபேசிகளின் உயிர்ப்பான தொழில்நுட்பமாக விளங்கும் GSM தனது 20 ஆவது ஆண்டுப் பூர்த்தியை கொண்டாடுகிறது.

1987 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7ம் திகதி, உலகின் 15 தொலைபேசிக் கம்பனிகள், Global System for Mobile எனும் GSM தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி செல்லிட வலையமைப்பை உருவாக்குவதற்கான ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டன.

GSM ஒன்றியத்தின் தகவல் படி, GSM தொழில்நுட்பமானது, உலகளவில் 2.5 பில்லியனுக்கும் அதிகமான கையடக்கத் தொலைபேசிகளில் பயன்படுத்தப்படுவதாக கணக்கிடப்பட்டுள்ளது.

அபிவிருத்தி அடைந்த வரும் நாடுகளிலும் செல்பேசிகளின் வியாபிப்பானது, தீவிரமாக இடம்பெற்று வருவதனால், GSM தொழில்நுட்பம் மிகவும் வினைத்திறனானதென்றே விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

1987 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் காரணமாக புதிய தொழில்நுட்ப அடைவைக் கொண்ட செல்பேசிகளின் வியாபிப்பு மிகத் தீவிரமாக உயர்ந்துள்ளதாக GSM ஒன்றியத்தின் தலைவர் Robert Conway குறிப்பிடுகின்றார்.

இன்றளவில் மனிதனின் வாழ்வில் கட்டாயம் இருக்கவேண்டிய ஒரு சாதனமாக செல்பேசிகள் மாறியுள்ளதாக கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது. பிரிட்டனில் Ofcom எனும் நிறுவனத்தால் 2006 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்பின் படி, பிரிட்டனின் 100 பேருக்கு, 116.6 செல்பேசி இணைப்புகள் இருப்பதாக அறியப்பட்டுள்ளது. ஆட்களையே மிஞ்சிவிட்ட செல்பேசி இணைப்புகள்!!!

அதுமட்டுமா, முதல் ஒரு பில்லியன் செல்பேசி இணைப்புகள் உலகளவில் வியாபிக்க 12 வருடங்கள் எடுத்ததாகவும், அது இரண்டு பில்லியன்களாக அதிகரிக்க வெறும் 30 மாதங்களே எடுத்ததாகவும் GSM ஒன்றியத்தின் புள்ளிவிபரங்கள் சுட்டி நிற்கின்றன.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளிலும் செல்பேசிகள் இன்றியமையாத கூறாக தீவிரமாக மாறியுள்ளது கவனிக்கப்பட வேண்டியதாகும். இதற்கு செல்பேசிகள் மலிவு விலையில் கிடைப்பதும். செல்பேசி இணைப்புகள் கவர்ச்சிகரமான விதவித வகைகளில் செல்பேசி வலையமைப்பு நிறுவனங்களால் குறைந்த விலையில் வழங்கப்படுவதும் காரணங்களாக இருக்கின்றன.

எதிர்காலத்தில் செல்பேசிகளின் வலையமைப்புகள் வேகமாக்கப்பட்டும், அவை செயற்கை நுண்ணறிவு கொண்ட நிலையில் பாவனைக்கு வரக்கூடிய சாத்தியங்களும் அதிகளவில் உள்ளதாக விமர்சகர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

எதிர்காலமென்பது, செல்பேசிகள் தொடர்பில் வித்தியாசங்களையும், வினோதங்களையும் கொண்டனவாக அமையுமென்பதில் இருவேறு கருத்திருக்க வாய்ப்பில்லை. Mobile Broadband எனும் தொழில்நுட்பமும் இந்நாட்களில் முன்னேறி வருவதை அவதானிக்க முடிகிறது. இதன் விளைவாக வேகமான இணைய இணைப்பை இலகுவாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பு எல்லோருக்கும் விரைவில் ஏற்படுத்தித் தரப்படலாம்.

செல்பேசிகளை பொருத்தமான நேரத்தில் பொருத்தமாக பயன்படுத்துதல் தொடர்பில் நாம் எம்மை புடம்போட்டுக் கொள்ளுதல் காலத்தின் தேவையே!

## 20 YEARS OF GLOBAL MOBILE COMMUNICATIONS

## Five Facts

- சீனாவில் 445 மில்லியன் GSM இணைப்புகள் உள்ளன.
- உலகளவில் 2.5 மில்லியன் GSM இணைப்புகள் காணப்படுகின்றன.
- உலகளவில் ஒவ்வொரு நாளும் ஏறத்தாள ஏழு பில்லியன் SMS எனும் குறுஞ்செய்திகள் பரிமாறப்படுகின்றன.
- ஒவ்வொரு நாளும் 1.2 மில்லியன் புதிய GSM இணைப்புகள் உலகளவில் வழங்கப்படுகின்றன.
- உலகளவில் அதிகம் விற்பனையாகியுள்ள கையடக்கத் தொலைபேசி வகை Nokia 1100 ஆகும்.

GSMA PHOTO/CHARLES STURGE



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோர்வடைதல் ஆகாது!!

கடந்த மாத இதழில் வெளியான கையடக்கத் தொலைபேசிகள் எம்மை முட்டாள் களாக்குகின்றனவா? என்ற தலைப்பிலான கட்டுரையில் இன்றைய தொழில் நுட்பத்தின் விரிவாக்க விளைவுகளால் மனித மூளையின் செயற்பாடுகள் எந்த அளவிற்கு மட்டுப் படுத்தப்பட்டு வருவதென்பது தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. உண்மையிலேயே நாம் இன்றைய நவீன தொழில் நுட்பத்தின் ஆத்திக்கத்தினால் முட்டாள்களாக்கப் படுகின் றோமா? என்ற சந்தேகம் எம்மில் எழுகின்றது.

பொதுவாக இன்றைய இளம் தலைமுறையினரிடையே ஞாபக சக்தி என்பது குறைவடைந்து வருவதையே பெரும் பாலும் காணக் கூடியதாகவுள்ளது. பலர் தத்தமது நாளாந்த செயற்பாடுகளைக் கூட ஓர் ஞாபகமூட்டும் கருவியின் துணையை நாடவேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ள இத் தருணத்தில், மனிதன் இவற்றுக் அடிமையாகி தன் மூளையை மேலும் "சோர்வடைய விடாதே! இத்தனை காலமும் தூங்கிக் கிடக்கும் நீ உசாரா வதற்கு இதுதான் தகுந்த தருணம்" என்று எம்மை விளிப்புணர்வூட்டிய தமிழ் PC TIMES சஞ்சிகைக்கு எனது மனமார்ந்த நன்றிகளும், வாழ்த்துக்களும்.

*S.V.P. சிபியோன், நாகியாதெனிய.*

## ஆச்சரியம் தான்!

கடந்த மாத இதழில் வெளியாகியிருந்த "விரல் நுனியில் விரியும் அதிசயம்" என்ற கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்த Bomb Proof USB Drive பற்றிய தகவல் ஆச்சரியத்தையே ஏற்படுத்தியது. தகவல்கள் யாவற்றையும் அழிந்த நிலையிலும் மீளப்பெற்றுக் கொள்ள வழி செய்யும் தொழில்நுட்பங்கள் இருக்கின்ற நிலையில், பௌதீக ரீதியான பாதிப்புகளால் தரவுகள் அழிக்கப்படாது என்பதை உறுதிப் படுத்தும் வகையிலேயே இந்தப் புதிய சாதனத்தை இனங்காண வேண்டியுள்ளது. நாளாந்தம் மிக வேகமாக முன்னேறி வரும் தொழில்நுட்ப அடைவுகள் மனிதனின் தேவைகளை அறிந்து அவற்றை இலகுவாக நிறைவேற்றுவதற்கான வழி வகைகளைச் செய்து வருகின்றன என்பது மட்டும் வெளிப் படையுண்மைதான்.

*பா.தனுசன், வவுனியா.*

## சமன்பாடு எங்கே?

★ உலகத் தோற்றத்தின் ஆரம்பங்களி லிருந்து சடவாத உலகிற்க்கும் ஆத்மார்த்த மான உலகுக்குமிடையில் ஓர் நுணுக்கமான முரண்பாடு இருப்பதை வரலாற்றை உற்று நோக்குபவர்கள் புரிந்து கொள்வர்.

இந்த முரண்பாட்டுக்கான ஓர் சமன் பாட்டை அல்லது சமநிலையை கொண்டு வருவதற்காகத்தான் உலகில் ஆகமங்களும், கொள்கைகளும், கோட்பாடுகளும் இதிகாசங் களும் தோற்றம் பெற்றன என்று கூறினால் அது மிகைப் படுத்தப்பட்ட கருத்தல்ல.

இந்த நவீன உலகில் சடவாத உலகிற்கு பதிலாக தகவல் தொழில் நுட்பத்தையும், ஆத்மார்த்த உலகிற்க்கு பதிலாக மனிதத் தையும் பிரதியீடு செய்வோமானால் உலகு இவற்றுக்கிடையிலான ஓர் சமன்பாட்டை அல்லது சமநிலையை தோற்றுவித்திருக்கிறதா? என்ற கேள்வி எழுகிறது.

சமூகத்தின் தனித்துவமான அடிமட்டக் கூறுகளை சிதைக்கும், சிறுவர்களைக் கூட விட்டுவைக்காத இணையத்தின் ஆபாச கலாச்சார பரவல், கணினியை கதி என்று ஆகிவிட்டவனில் தோன்றும் முரண்பட்ட சமூக நடத்தைகள் மற்றும் உடல், உளவியல் சார்ந்த நோய்கள், புதிய கணினிக் கண்டுபிடிப்புக்களை தனது பெயரில் மட்டும் பதிவு செய்து உலகில் பாரிய இடைவெளிகொண்ட பொருளாதார ஏற்றத் தாழ்வை ஏற்படுத்தல், கணினிக் கழிவுகளை மூன்றாம் மண்டல நாடுகளில் கொட்டும் முதலாளித்துவத்தின் வக்கிர




வாசகர் திருமுகம்

புத்தி என்பன இக் கேள்வியை இன்னும் கூர்மையாக்குகிறது.

இத்தனைக்கும் மத்தியில் "மனிதனு க்கு சவாலாகியுள்ள மனிதப் போலிகள்", "கணினிக் கழிவுகள்" "மனித சுதந்திரத்தை கேள்விக்குள்ளாக்கியுள்ள இணையம்" போன்ற கட்டுரைகள் மூலம் இந்த சடவாத தகவல் தொழில்நுட்ப உலகிற்க்கும் ஆத்மார்த்தமான மனிதத்துவ உலகிற்கு மிடையில் PCTIMES ஒரு சமன்பாட்டை அல்லது சமநிலையை நிறுவ முயற்சிப்பதில் தான் PCTIMES தனித்துவம் பெறுகிறது. எனினும் இது இன்னும் விசாலிக்கப்பட வேண்டும்.

*ஏ.எம்.எம். அஸ்வர், வெலம்பொட*

## இன்னுமொரு தலையிடி!!

இணையத்தின் துணையுடன் புதிய நவீன தொழில்நுட்ப விருத்தியின் உதவியுடன் தனி மனிதனின் வாழ்க்கை கோலத்தை ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள்ள மட்டு ஷமல்ல வியாபார நோக்குக்காக பல நிறுவனங்கள் இம் முயற்சியில் குதித்துள்ளமை தனி மனித சுதந்திரத்தை கேள்விக்குள்ளாக்கும் செயல் என்பதுதான் உண்மை. புதிய தொழில்நுட்பங்கள் எதனை கண்டாலும் அவற்றுக்கு அடிமையாகும் மக்கள் இத் தொழிநுட்பத்துக்கும் அடிமையாகி உள்ளது கவலைக்குரியதே. எனினும் இந் நிகழ்ச்சி பாரிய தொழிநுட்ப அறிவின் புதிய படி என்பது மறுக்க முடியாத ஒன்றாகும்.

இங்கு பல்லாயிரக்கணக்கான மக்களி டையே பாவனையில் உள்ள கையடக்க தொலைபேசிகள் இணையம் என்பன இயன்ற அளவில் "உச்ச வளப் பயன்பாடு" (Sustainable Use) எனும் தொனியினை நோக்காகக் கொண்டு செயற்படுத்தப்படுவது வரவேற்கக் கூடியதே. மேலும் பாரம்பரிய தொழில் நுட்பங்களுக்கு சவாலாக உள்ள புதிய தொழிநுட்பங்களின் வருகைபாரம்பரியநுட்பங்களை விருத்திசெய்ய வேண்டிய தேவையை உணர்த்தி நிற்கிறது. இப் புதிய நுட்பங்கள் தனி ஒருவரின் சுதந்திரத்தை பாதிக்காத வரையில் அதனை நாடும் புதிய தலைமுறையின் வளர்ச்சி வேகத்தை தடுக்க முடியாது. நவீன நுட்பங்களின் ஒவ்வொரு படியையும் உடனுக்குடன் தொகுத்தளிக்கும் PCTIMES க்கு உள மார்ந்த நன்றிகளும் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

*S.விநோத், மட்டக்களப்பு*

### தமிழ் PCTIMES ஐ அடைவதற்கு

Mail Box,
Tamil PC TIMES,
Wijeya Newspapers Ltd.,
No. 08, Hunupitiya Cross Road,
Colombo -02.
Email: pctimes@wijeya.lk

நீங்கள் அனுப்பும் கடிதங்கள் கருத்தை வெளிப்படுத்தும் பொருட்டும், குறுகிய இடத்தைக் கருத்திற் கொண்டும் தொகுக்கப்படலாம்.

★ என குறியிடப்பட்டுள்ள வாசகர் திருமுகத்தை அனுப் பியவர் நவம்பர் மாதம் முதல் மூன்று மாதங்களுக்கான தமிழ் PC TIMES சஞ்சிகையை பெறும் வெற்றியாளராகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணையத்தில் இலவசமாக இடம்



பொதுவாக நாம் File களைப் பரிமாறிக்கொள்வதற்காக e-mail களைப் பயன்படுத்தி வருகிறோம். e-mail மூலம் சிறிய கொள்ளளவை ( 20MB ) க் கொண்ட File களையே attach பண்ணி அனுப்பவும் பெறவும் முடியும். ஆனால் 100MB கொள்ளளவுடைய File கள் வரை இலவசமாக பரிமாறக்கூடிய வகையில் mediafire.com எனும் இணையத்தளம் நமக்கு உதவுகிறது. இங்கே நமக்குத் தேவையான image, video, exe, zip வகையைச் சார்ந்த எந்த File களையும் upload செய்துகொள்ள முடியும். இவ்வாறு upload செய்ததும் அந்த File இற்குறிய download link ஆனது நமக்கு வழங்கப்படும். இந்த link ஐ e-mail செய்வதன் மூலமோ அல்லது உங்களுக்குரிய இணையத்தளத்தில் இடுவதன் மூலமோ upload செய்த File ஐ download செய்துகொள்ளலாம். இவ் இணையத்தளத்திற்குரிய இணைய முகவரி http://www.mediafire.com என்பதாகும்.

## சலனப் படங்களின் சோலை



இணையத்தில் இலவசமாக video க்களைப் பகிர்ந்துகொள்ளக்கூடிய வசதியை பல இணையத்தளங்கள் நமக்கு வழங்குகின்றன. அவ்வாறான சிறந்த இணையத்தளங்களில் ஒன்றாக dailymotion.com ஐக் குறிப்பிடலாம். இங்கே இணையப் பயனர்களினால் நாள்தோறும் பல வகையான video file கள் upload செய்யப்படுகின்றன. அவ்வாறு upload செய்யப்பட்ட video க்களை அவ் இணையத்தளத்திலிருந்தே பார்க்கக்கூடிய வசதி காணப்படுவதுடன், நம்மிடமுள்ள video க்களை upload செய்துகொள்ளவும் முடியும். 20 நிமிட அளவைக்கொண்டதும், 150 MB வரை கொள்ளளவைக் கொண்ட video க்களைக் கூட upload செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளமை, இவ்விணையத்தளத்தினது சிறப்பம்சங்களில் ஒன்றாகும். இந்த இணையத்தளத்தின் முகவரி http://www.dailymotion.com ஆகும்.

## உயிர்ப்புள்ள விஞ்ஞானம்



நம்மை வியப்பில் ஆழ்த்தும் வகையில் உலகம் பல துறைகளிலும் துரித கதியில் முன்னேற்றமடைந்து வருகின்றது. நாளுக்கு நாள் பல்வேறுபட்ட துறைகளிலும் புதிய கண்டுபிடிப்புகளும், மாற்றங்களும் நிகழ்ந்து வருகின்றன. இவற்றை எல்லாம் எவ்வாறு உடனுக்குடன் அறிந்துகொள்வது என்ற எண்ணம் உங்களுக்குத் தோன்றலாம். இதற்காக livescience.com எனும் இணையத்தளம் உங்களுக்காக தமது சேவையை விரிவாக வழங்குகின்றது. இது விஷேடமாக தொழில்நுட்பம், சுகாதாரம், விண்வெளி, சுற்றாடல், விலங்கியல் போன்ற துறைகளில் நிகழும் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் மாற்றங்கள், அவை பற்றிய விரிவான விபரங்கள் போன்றவற்றை ஆக்கங்கள் மூலமாகவும் மற்றும் video, image போன்ற வடிவங்களிலும் விஞ்ஞான ரீதியாக தருகிறது. மேலும் இவை பற்றிய விபரங்களை நாள்தோறும் e-mail மூலம் நமக்கு இலவசமாக உடனுக்குடன் அறியத்தருவது இவ் இணையத்தளத்தின் சிறப்பம்சங்களில் ஒன்றாகும். இந்த பயன்மிகு இணையத்தளத்தினது இணையமுகவரி http://www.livescience.com என்பதாகும்.

*Hanees*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## Toyota வின் Robina

கால்களுக்காக நகரும் சக்கரங்களையும், மூட்டுக்களையுடைய கைகளையும் கொண்ட வகையில் "Robina" எனும் வழிகாட்டி ரோபோவொன்றை ஜப்பானின் Toyota நிறுவனம் உருவாக்கியுள்ளது. 1.2 மீற்றர் உயரமுடைய இந்த மனிதப்போலி ரோபோவானது, பேனாவினால் கையெழுத்துக் கூட வைக்கும் திறனுடையதாம். இந்த Robina எனும் ரோபோவையே படத்தில் காண்கிறீர்கள்.

AFP PHOTO/TOYOTA MOTORS/HO

Printed & Published by Wijeya Newspapers Ltd., No.8, Hunupitiya Cross Road, Colombo - 02.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org